ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி சு.	சுக்கிலஹு கார்த்திகைமீ	பகுதி யக.
Vol 6.	*November & December 1929.*	No. 11.

நவரத்னமாலை.

[லோகதேசிகன் அருளிச்செய்த பதினெண் ரஹஸ்யங்களுள் இந்த நவரத்னமாலை என்பதும் ஒன்று. ப்ரபந்நராயிருப்பாரனைவரும் போற்றத்தக்க ஒன்பது ரத்னம்போன்ற விஷயங்கள் இதிலடங்கி யுள்ளனவாதலால் இதற்கு நவரத்னமாலை என்று பெயர் வழங்கலா யிற்று. இதை யாவரும் பயின்று பொருளறிந்துகொள்வதற்கு ஈண்டு இதற்குப் பொருள் எழுதப்பெறுகிறது.]

(க) சரணாகதனானவன் (உ) தன்னையும் (ங) தனக்கு விரோதி

(க) சரணாகதனென்றது எம்பெருமானே உபாயோபேயமென்று பிரார்த்திக்கிற புத்தியுடையவன் என்றவாறு. (உ) தன்னையும் என்றது சரணாகதன்றன் ஆத்மாவையும் என்றவாறு. (ங) தனக்கு விரோதியான தேஹத்தையும் என்றது ஆத்மாவுக்கு விரோதியான தேஹத்தையும் என்றவாறு. "ஶரீரமாத்யம் கலு தர்மஸாதநம்" "சரீரமாத்யம் கலு தர்ம ஸாதநம்" ஆத்மாவுக்கு ஸத்கர்மங்களைச் செய்வதற்குச் சரீரம் சாதனமாயிருக்கு மென்று சொல்லப்பட்டுளது. அங்ஙனமிருக்க இங்குச் சரீரத்தை விரோதி யாகச் சொல்லலாமோவென்னில்; ஆத்மா தனியே இருந்து ஒரு காரியத்தை யும் செய்யமாட்டாது. தேகத்தைப்பெற்றே எல்லாக் காரியத்தையுஞ் செய் யும். ஆனதுபற்றிச் சரீரம் தர்மசாதனமாகச் சொல்லப்பட்டது. சரீரத்தின் இயல்பை ஆராயுமிடத்து அது மிச்ரதத்வத்தினால் ஆக்கப்பட்டபடியால் ஆத்மாவுக்கு விரோதியாயிருக்கும். விரோதியான சரீரத்தைப்பெற்று ஆத்மா அநுகூலத்தை எவ்வாறு பெறுவதென்னில்; அறிஞரோடிணங்கியிருப்ப

யான தேஹத்தையும் (௪) தேஹத்தைப்பற்றிவரும் பந்துக்களையும் (௫) சம்சாரிகளையும் (௬) தேவதாந்தரங்களையும், (௭) ஸ்ரீவைஷ்ணவர்களையும், (௮) பிராட்டியையும் (௯) ஈசுவரனையும் நினைத்திருக்கும்படி எங்ஙனேயென்னில்;

(1) உடம்பில் வேறுபட்டு நித்யனாய், ஒருபடிப்பட்டு அணுவாய், ஜ்ஞாநத்தையும் ஆநந்தத்தையும் வடிவாகவுடையனாய்,

---

தாலும், சாஸ்த்ர சிரவணத்தாலும் மனத்தைப் பொறிவழியிற் செல்லவொட்டாமலடக்கி ஒழுகினால் சரீரத்தினால் நற்பயனையடையலாமாதலால் பொருந்துமென்க. நாவானது தனக்குப் பகையாயிருக்கிற பற்களைக்கொண்டே ருசியை அறிவதுபோல விரோதியான சரீரத்தைக்கொண்டே ஆத்மா நற்பயனையடையத் தடையில்லை.

(௪) தேகத்தைப்பற்றிவரும் பந்துக்களையும் என்றது சரீரசம்பந்தமாக வருகிற உறவினர்களையும் என்றவாறு. என்னைப்பெற்றார், பெறுவித்தார், எனக்குற்றார் என்பதெல்லாம் சரீரசம்பந்தமாக வருவதாதலால் சரீரத்தைப் பற்றி வருகிற பந்துக்கள் என்று சொல்லப்பட்டது. (௫) சம்சாரிகளையுமென்றது ஜனன மாண முதலான பெருந்துன்பங்களிற் கிடந்துழல்கின்றவர்சளென்றவாறு. (௬) தேவதாந்தரங்களையும் என்றது பிர்ம்ம ருத்திராதி தேவர்களையும் என்றவாறு. (௭) ஸ்ரீவைஷ்ணவர்களையும் என்றது ஞானபக்தி வைராக்யமுடைய எம்பெருமானது சம்பந்திகள் என்றவாறு. (௮) பிராட்டியையும் என்றது ஆத்மாக்கள்செய்த அபராதங்களைப்பொறுப்பித்து எம்பெருமானிடத்திற் சேர்க்கும் பரமோபகாரியான ஸ்ரீதேவியையும் என்றவாறு (௯) ஈசுவரனையும் என்றது சமஸ்த ஐசுவர்யங்களையுமுடைய எம்பெருமானையும் என்றவாறு. நினைத்திருக்கும்படி எங்ஙனேயென்னில் என்றது இவர்களை எவ்வெவ்வாறு கருதிக்கொண்டிருப்பதென்றவாறு. இவர்களது உண்மை நிலையறிந்து அவ்வவரை அறிந்தபடி கருதிக்கொண்டிருக்கவேண்டுமென்பது கருத்து.

(1) உடம்பில் வேறுபட்டு நித்யனாய் என்றது உடம்பு பிறத்தல் வளர்தல் தேய்தல் மரித்தல் என்ற இயல்புகளையுடையதாயிருக்கும். இவ்வியல்பின் வேறுபட்டு என்றுமுளனாயென்றவாறு. ஒருபடிப்பட்டு அணுவாய் என்றது வளர்தல் தேய்தல் முதலிய விகாரப்பாடில்லாமல் எப்பொழுதும் ஒரு தன்மைத்தாயிருக்கும் அணுவடிவினனாயென்றவாறு. நெல்லினுனியை நூறு கூறிட்ட ஒரு கூற்றை நூறு கூறு செய்த ஒரு கூறு எவ்வளவு அளவுடையதாயிருக்குமோ அவ்வளவுடையதை அணுவென்று வழங்குவார்கள். ஜ்ஞாநத்தையும் ஆநந்தத்தையும் வடிவாகவுடையனாய் என்றது ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனாய் என்றவாறு. ஜ்ஞாநத்துக்கும் ஆநந்தத்துக்கும் இருப்பிடமாய்

ஜ்ஞாநத்துக்கும் ஆநந்தத்துக்கும் இருப்பிடமாய், எம்பெருமானை யொழிய வேறொன்று நினைத்தல் சொல்லுதல் செய்யமாட்டாதே எம்பெருமானுக்கே உரியனாய், தன் கார்யத்திற்குத் தான் கடவனன்றிக்கே அவனையே பலமாகவுடையனாயிருக்குமென்று தன்னை நினைப்பான்.

(2) தன்னையுள்ளபடி அறியவொட்டாதே விபரீதஜ்ஞானத்தை ஜநிப்பித்து இருபத்துநாலு தத்வங்களினுடைய திரளாய்,

---

என்றது ஜ்ஞாநாநந்தங்கட்கு ஆதாரமாய் என்றவாறு. தீபம் ஒளி என்ற இரண்டும் ஒளியுடைப்பொருள்களாயிருந்தாலும் தீபம் ஒளிக்கு இருப்பிடமாயிருப்பதுபோலஆத்மா ஜ்ஞாநாநந்தவடிவினனாயிருக்கச்செய்தேயும் தனக்குத் தர்மமாயிருக்கின்ற ஜ்ஞாநம் தன்னையொழியப் பிரிந்துநிற்றற் கியலாதபடி அதற்கு ஆத்மா ஆதாரமாயிருப்பானென் றறியத்தக்கது. எம்பெருமானை யொழிய வேறொன்று நினைத்தல் சொல்லுதல் செய்யமாட்டாதே எம்பெருமானுக்கே உரியனாய் என்றது எம்பெருமான் அந்தர்யாமியாய் (உள்ளேயிருந்து நியமிப்பவனாய்) இல்லாதொழிவனேல் ஜீவன் நினைத்தல் சொல்லுதல் முதலிய வியாபாரங்களற்றவனாய், எம்பெருமானுக்கே அடிமையாதற்குரியனாயிருப்பான் என்றவாறு. தன் கார்யத்திற்குத் தான் கடவனன்றிக்கே அவனையே பலமாகவுடையனாயிருக்கும் என்றது தன்னுடைய (ஆத்மாவினுடைய) காரியத்தைச் சித்திசெய்துகொள்வதற்குத் தானுரியவனன்றிக்கே அவனையே பிரயோஜனமாகவுடையனாயிருப்பான் என்றவாறு. ஆத்மா முயன்ற செய்கிற காரியத்தில் ஸர்வேசுவரன் அநுமதி செய்யாதபோது அக்காரியம் வித்தியாதொழியும். ஜீவனுடைய காரியஸித்திக்கும் அவனுடைய அநுமதியே காரணமாயிருத்தலால் இங்குத் தன் காரியஸித்திக்குத் தான் கடவனன்றிக்கே என்று சொல்லப்பட்டது. தன்னை நினைப்பான் என்றது ஆத்மாவினுடைய உண்மை நிலையிதுவாதலால் இங்ஙனம் நினைக்கக்கடவன் என்றவாறு.

(2) தன்னையுள்ளபடியறியவொட்டாதே என்றது ஆத்மா எம்பெருமானுக்கடிமையாயிருப்பான் என்ற உண்மையை அறியவொட்டாமல் என்றவாறு. விபரீத ஜ்ஞாநத்தை ஜநிப்பித்து என்றது ஆத்மா ஸ்வதந்தரன் என்ற உணர்வைப் பிறப்பித்து என்றவாறு. இருபத்துநாலு தத்வங்களின் திரளாய் என்றது இருபத்துநான்கு தத்வங்களின் கூட்டமாய் என்றவாறு. இருபத்துநான்கு தத்வங்களாவன.— ப்ருதிவீ அப்பு தேயு வாயு ஆகாசம் என்ற ஐந்து பூதங்களும், வாக்கு பாணி பாதம் பாயு உபஸ்தம் என்ற ஐந்து கர்மேந்திரியங்களும், மெய் வாய் கண் மூக்கு செவி என்ற ஐந்து ஞானேந்திரியங்களும், சப்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்ற ஐந்து விஷயங்களும், மனம் அஹங்

அநித்யமாய், எப்போதுமொக்கப் பரிணமிக்கக்கடவதாய் ஒருநாளும் ஜ்ஞாநத்துக் கிருப்பிடமன்றிக்கே அநந்த துக்கங்களை விளைப்பிக்கக் கடவதாய், சப்தாதிவிஷயங்களிலே மூட்டி நசிப்பிக்குமென்று தன் தேஹத்தை நினைப்பான்.

(3) ஆத்ம ஜ்ஞாநத்தையும் பகவத் ஜ்ஞாநத்தையும் பகவத் விஷயத்தில் ருசியையும் த்வரையையுங் குலைத்து, தேஹாத்மாபி

காரம் மஹாந் ப்ரக்ருதி என்ற நான்கும் ஆக இருபத்துநான்காம். "பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதம், இங்கிவ்வுயிரே பிரகிருதி மாநாகங்கார மனங்களே" என்ற ஆழ்வாருளிச்செயலு மிங்கறியத் தக்கது. அநித்யமாய் என்றது அழிவுடையதா யென்றவாறு. எப்போது மொக்கப் பரிணமிக்கக் கடவதாய் என்றது எல்லாக் காலங்களிலும் விகாரத் தோற்றமுடையதாய் என்றவாறு. தேஹம் எப்பொழுதும் ஒருபடிப்பட்டிராதென்பதாம். ஒருநாளும் ஜ்ஞாநத்துக்கிருப்பிடமன்றிக்கே அநந்த துக்கங்களை விளைப்பிக்கக்கடவதாய் என்றது ஒருநாளேனும் அறிவுக்கிருப்பிடமன்றிக்கே கணக்கற்ற துக்கங்களை விளைப்பிக்குமதாய் என்றவாறு. சப்தாதி விஷயங்களிலே மூட்டி நசிப்பிக்குமென்றது ஆத்மாவைப் புலன்களை (சுவை ஒளி ஊறு ஓசை நாற்றங்களை) நுகரும்படிசெய்து கெடுக்கும் என்றவாறு. ஆத்மா மனத்தின் வழியாகச் சென்று இந்திரியங்களிற்புகுந்து புலன்களை அநுபவித்துக் காலத்தைப் போக்குவானேல் ஒருபொழுதும் ஈடேறமாட்டான். இதுபற்றி நசிப்பிக்குமென்று சொல்லப்பட்டது. ஆதலால் இங்கு நசிப்பிக்குமென்பதற்குக் கொல்விக்குமென்று பொருள்கொள்ளாது ஆத்மாவின் ஸ்வரூப இயல்புகளை மாற்றுவிக்கும் என்று பொருள்கொள்ளத்தக்கது. தன் தேகத்தை நினைப்பானென்றது தன் தேகமானது எப்போதும் விரோதத்தைச் செய்யும் இயல்பினையுடையதென்று நினைக்கக்கடவனென்றவாறு.

(3) ஆத்மஜ்ஞாநத்தையும் என்றது ஆத்மா எம்பெருமானுக் கடிமையாயிருப்பானென்ற ஆத்ம விஷய ஜ்ஞானத்தையும் என்றவாறு. பகவத் ஜ்ஞாநத்தையும் என்றது எம்பெருமான் சேஷியாய் (தலைவனாய்) இருப்பானென்ற பகவத்விஷய ஜ்ஞாநத்தையும் என்றவாறு. பகவத் விஷயத்தில் ருசியையும், த்வரையையும் குலைத்து என்றது ஈசுவர விஷயத்தில் மிகுந்த பிரீதியையும் அது காரணம் உண்டாகிற விரைவுடைய புத்தியையும் கெடுத்து என்றவாறு. ஈசுவரவிஷயத்தில் மிகுந்த பிரீதியுண்டாகுமேல் அது காரணமாக அவனையடைந்தல்லது தரிக்கவொண்ணாத விரைவுடைய புத்தியுண்டாகும். இவையுண்டாவதற்கும் பந்துக்கள் தடையாயிருப்பார்களென்பது கருத்து. தேஹாத்மாபிமானத்தையும் என்றது அழியுமியல்பினதாகிய சரீரமே ஆத்மா என்ற அபிமானத்தையும் என்றவாறு. அஹங்காரமமகாரங்களையும் என்றது யான்

மானத்தையும், அஹங்கார மமகாரங்களையும், காமக்ரோதாதிகளையும் விளைப்பித்து, பல படியாலும் அநர்த்தத்தைப் பண்ணுவார்களென்று தேஹத்தைப்பற்றிவரும் பந்துக்களை நினைப்பான்.

(4) பகவதநுபவத்துக்கும் பகவத் கைங்கர்யத்துக்கும் விரோதிகளாய் ஸம்ஸார வர்த்தகராயிருப்பார்களென்று ஸம்ஸாரிகளை நினைப்பான்.

(5) அஜ்ஞராய், அசக்தராய், எம்பெருமான் பக்கலிலே பிறந்து

எனது என்கிற அஹங்காரமமகாரங்களையும் என்றவாறு. இந்த அஹங்கார மமகாரங்களைப் பிறவிக்கு வித்து என்பர்கள். இந்த துர்க்குணமொழியும் வரையிலும் பிறப்புமொழிவதில்லை. இதனால் ஆழ்வாரும் "நீர்நுமதென்றிவை, வேர் முதன்மாய்த்திறை, சேர்மின்" என்று உபதேசித்தார். காமக்ரோதாதிகளையும் விளைப்பித்து என்றது வேட்கை கோபம் முதலியவற்றைப் பிறப்பித்து என்றவாறு. "𑌸𑌂𑌗𑌾𑌤𑍍𑌸𑌂 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌕𑌾𑌮𑌃 𑌕𑌾𑌮𑌾𑌤𑍍 𑌕𑍍𑌰𑍋𑌧𑍋𑌽𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇, 𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌦𑍍 𑌭𑌵𑌤𑌿 𑌸𑌂𑌮𑍋𑌹𑌃 𑌸𑌂𑌮𑍋𑌹𑌾𑌤𑍍 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌃, 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌭𑍍𑌰𑌂𑌶𑌾𑌦𑍍 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌾𑌶𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌾𑌶𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌿" "ஸங்காத்ஸம் ஜாயதே காம: காமாத் க்ரோதோபிஜாயதே, க்ரோதாத்பவதி ஸம்மோஹ: ஸம்மோஹாத் ஸ்மிருதி விப்ரம:, ஸ்மிருதி ப்ரம்சாத் புத்திநாசோ புத்திநாசாத் ப்ரணச்யதி" என்று கண்ணபிரான் கீதையில் விஷயங்களிற் பற்றுண்டானல் ஆசையும், அதனல் கோபமும், அறிவின்மையும், அதனல் நினைவு மாறுபடுதலும், அதனல் புத்தி நாசமும், அதனல் ஸம்ஸாரத்திலழுந்துதலும் உண்டாகுமென்று அருளிச்செய்தான். இந்த துர்க்குணங்களெல்லாமுண்டாவதற்கு உறவினர்களே காரணமாயிருப்பார்களென்றறியத்தக்கது. பலபடியாலும் அநர்த்தத்தைப் பண்ணுவார்களென்றது இன்னும் பலவகையாலும்கெடுதியை உண்டுபண்ணுவார்களென்றவாறு. தேகத்தைப்பற்றி வருகிற பந்துக்களை நினைப்பான் என்றது சரீர சம்பந்தத்தால் வருகிற உறவினரை இங்ஙனம் கருதக்கடவன் என்றவாறு.

(4) பகவதநுபவத்துக்கும் என்றது எம்பெருமானுடைய குணாநுபவத்திற்கும் என்றவாறு. பகவத் கைங்கர்யத்துக்கும் விரோதிகளாய் என்றது ஈசுவரவிஷயமான பணிவிடைகட்கும் விரோதிகளாய் என்றவாறு. ஸம்ஸார வர்த்தகராய் என்றது ஜன்ம மரணாதிகளிற் கிடந்துழல்வதை விர்த்தி செய்பவராய் என்றவாறு. ஸம்ஸாரிகளை நினைப்பான் என்றது ஸம்ஸாரிகளை இவ்வாறு கருதக்கடவன் என்றவாறு.

(5) அஜ்ஞராய் என்றது அறியாதவராய் என்றவாறு. அசக்தராய் என்றது சக்தியற்றவராய் என்றவாறு. எம்பெருமான் பக்கலிலே பிறந்து என்

அவன் கொடுத்த பதங்களையுடையராய், அவனோடே எதிரிட்டுத் தர்மானிகளாய், தங்களைப் போரப் பொலிய நினைத்து நாட்டாரை ப்ரமிப்பித்து அநர்த்தத்தைப் பண்ணுவார் சிலரென்று தேவதாந்தரங்களை நினைப்பான்.

(6) பகவத் ஜ்ஞாநத்துக்கும் இதரவிஷய வைராக்யத்துக்கும் பகவத் பக்திக்கும் வர்த்தகராய், சேஷிகளாய், உசாத்துணையாய்,

---

றது ஸர்வேசுவரனிடத்திலுண்டாகி என்றவாறு. "நாராயணன் படைத்தான் நான்முகனை நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்" என்றதனால் இதரதேவதைகள் எம்பெருமானிடத்தில் தோன்றியவர்களென்று நன்கறியலாம். அவன் கொடுத்த பதங்களையுடையராய் என்றது எம்பெருமானால் கொடுக்கப்பட்ட ஸ்தானங்களையுடையராய் என்றவாறு. அவனோடே எதிரிட்டுத் தர்மானிகளாய் என்றது எம்பெருமானோடே எதிர்த்துப்போராடும் கெட்ட அபிமானமுடையவராய் என்றவாறு. வாணாசுர யுத்தகாலத்தில் ருத்ரனும், பாரிஜாதபுஷ்பத்தைக் கொய்து வருகிற காலத்தில் இந்திரனும் எம்பெருமானோடெதிர்த்துப் போராடினமையறியலாம். தங்களைப் போரப் பொலிய நினைத்து என்றது என்னால் லோகம் சிருஷ்டிக்கப்படுகிறது; நான் சிருஷ்டி கர்த்தா; நான் சம்ஹார கர்த்தா என்று தம்மை மிகவும் பூரணராக நினைத்து என்றவாறு. நாட்டாரை ப்ரமிப்பித்து என்றது அறிவிலிகள் பிர்ம்ம ருத்ராதிகளே பரதேவதை யாவார்கள் என்று மயங்கும்படி செய்து என்றவாறு. நாட்டாரென்பது ஈண்டு இலக்கணையால் அறிவிலிகளையுணர்த்தும். "நாடுநகரமும் நன்கறிய" என்றவிடத்திற் பெரியார் நாடென்பதற்கு அஜ்ஞரென்று பொருளுரைத்தமையுங்காண்க. இதனால் நாகரிகர்களாகிய பேரறிவாளரைப் பிர்ம்ம ருத்ராதிகள் மயப்பிக்க வல்லுநராகாரென்பது குறிப்பு. ருத்ரன் ஆகமங்களைப் பிறப்பித்து அதில் தன்னையே பரதேவதையாகக் கூறியதினால் அறிவிலிகள் பலர் ருத்ரனே பரதேவதையென்று மயங்கிப் பற்றுகிறார்கள். இதனால் இவர்கள் ஆகமவாயிலாகநாட்டாரை மயப்பிக்கிறார்களென்று நோக்கத்தக்கது. அநர்த்தத்தைப் பண்ணுவார் சிலர் என்றது கெடுதியை விளைவிப்பார் சிலர் என்றவாறு. பரதேவதையல்லாத் தம்மைப் பரதேவதையென்று மதிக்குமாறு நாட்டாருக்கு மயக்கவுணர்வைத் தந்து அதனால் அவர்கள் ஸம்ஸாரத்திற்கிடந்துழலும்படி செய்கின்றார்களாதலால் அநர்த்தத்தைப் பண்ணுவார் என்று சொல்லப்பட்டது. தேவதாந்தரங்களை நினைப்பான் என்றது எம்பெருமானுக்குப் புறம்பான தெய்வங்களை இவ்வாறு கருதக்கடவன் என்றவாறு.

(6) பகவத் ஜ்ஞாநத்துக்கும் என்றது எம்பெருமானே உபாயோபேயமாவான்; அவனே எல்லா உறவுமுறையுமாவான் என்ற ஈசுவர விஷஜ்ஞாநத்துக்கும் என்றவாறு. இதர விஷய வைராக்யத்துக்கும் என்றது சப்தாதி

ப்ராப்யத்துக்கு எல்லேநிலமாயிருப்பார்களென்று ஸ்ரீவைஷ்ணவர்களை நினேப்பான்.

(7) தன் கடாக்ஷத்தாலே என்னைத் திருத்தி, ஸர்வேசுவரன் கைக்கொள்ளுகைக்கு யோக்யனும்படி பண்ணி, அவன் திருவடி

விஷயங்களில் ஆசையறுகைக்கும் என்றவாறு. மனம் இந்திரியங்களின் வழியாகச்சென்று விஷயங்களை யநுபவித்துத் திரியுமாகில் ஈசுவர விஷயத்திற் பேரன்பு பிறப்பதரிதாகுமாதலால் ஈசுவர விஷயமான பக்திபண்டாவதற்குமுன்பு இதரவிஷய வைராக்யமுண்டாகவேண்டுமென்பது பெறப்பட்டது. பகவத்பக்திக்கும் வர்த்தகராய் என்றது ஈசுவர பக்தியையும் விர்த்தி செய்யுமவராய் என்றவாறு. சேஷிகளாய் என்றது தலைவர்களாய் என்றவாறு. எம்பெருமானே பரமசேஷியாகவிருந்தாலும் அவன்றன்னடியார்களைச் சேஷியாகக் கொண்டொழுகாதபோது ஜீவன்றன்னடிமைத்திறம் விளங்கப்பதில்லையாதலால் அவர்களை ஸ்வாமியாகக் கொண்டொழுகவேண்டுமென்பது தெளிவாகிறது. இதுபற்றியே ஆழ்வாரும் "எம்மையாளும் பரமரே" என்றும், "எம்மையாளுடை நாதரே" என்றும், "எம்தொழுகுலந்தாங்களே" என்றும், "எம்மடிகளே" என்றும் அருளிச்செய்தார். உசாத்துணைகளாய் என்றது அளவளாவுந்துணைவர்களாய் என்றவாறு. இவ்வுலகத்தில் அடியார்கள் துணைவராயிருப்பது மாத்திரமன்றிக்கே வீட்டுலகமும் "அடியார் நிலாகின்ற வைகுந்தம்" என்றபடி அடியார்கள் விளங்கப்பெற்ற தொன்றாதலான் ஆங்கும் இவர்களே துணைவராயிருப்பார்கள். "புணைகொடுக்கினும் போகவொட்டார்" தலரன்றோ! ப்ராப்யத்துக்கு எல்லேநிலமாயிருப்பார்களென்றது பிரயோஜனத்தின் அவதியிடமாயிருப்பார்களென்றவாறு. ப்ராப்யம்—அடையத்தக்கது. அஃதாவது கைங்கர்யம். எல்லை நிலம்—மேலெல்லையில்லாத வரம்பிடம். எல்லைநிலமானது முடிந்த எல்லையைக்காட்டுமோ அதுபோல பாகவத கைங்கர்யமே கைங்கர்யத்தின் முடிவைக்குறிக்கும். அஃதாவது இதற்குமேலுள்ளதொரு கைங்கர்யமில்லை என்றபடி. பாகவத கைங்கர்யத் தளவுமானலொழிய பகவத் கைங்கர்ய பூர்த்தியில்லையாதலால் ப்ராப்யத்துக்கு எல்லைநிலமாயிருப்பார்களென்று சொல்லப்பட்டது. "அடியார்க்கென்னையாட்படுத்தவிமலன்" என்று பாண்பெருமாள், 'எம்பெருமான் என்னடிமைத்திறத்தை நிலைநிறுத்த என்னை அடியார்க்காட்படுத்தினன்' என்று கொண்டாடியது மிங்கறியத்தக்கது.

(7) தன் கடாக்ஷத்தாலே என்னைத் திருத்தி என்றது தன்னருள் நோக்காலே என்னை நன்னிலையில் நிற்கும்படி செய்து என்றவாறு. ஸர்வேசுவரன் கைக்கொள்ளுகைக்கு யோக்யனும்படிபண்ணி என்றது எம்பெருமான் அங்கீகரிக்கைக்குத் தகுதியுடையனும்படிசெய்து என்றவாறு. அவன் திருவடிகளிலே சேர்த்து என்றது எம்பெருமான் திருவடியை அடையும்படி

களிலே சேர்த்து, அறியாதன வறிவித்து, ஸ்வாமியாய், என்று மொக்க அடிமைகொள்ளும் மஹோபகாரனென்று ஆசார்யனை நினைப்பான்.

(8) நம்முடைய ஸர்வாபராதத்தையும் பொறுப்பித்து, ஈசுவர ஸ்வாதந்த்ர்யத்தையுங்குலைத்து, அவனுடைய காருண்ய வாத்ஸல்

செய்து என்றவாறு. அறியாதன அறிவித்து என்றது ஜ்ஞாநத்தெளிவைப் பிறப்பித்து என்றவாறு. ஆசார்யனால் உணர்த்தப்படுகிற ஜ்ஞாநத்தெளிவை வித்யாஜன்மமாகச் சொல்லப்படும். மாதா பிதாக்களாலாகும் சரீர ஜன்மத்தைக்காட்டிலும் இந்த வித்யாஜன்மம் சிறந்ததென்றறியத்தக்கது. ஸ்வாமியாய் என்றது சிஷ்யனது ஆத்மசொத்தையுடையனாய் என்றவாறு. "ஆசார்யன் சிச்சனுருயிரைப்பேணுமவன்" என்று இங்குச் சிஷ்யனுடைய உயிரை ஆசார்யன் பேணக்கடமையுடையவனென்றிருப்பதால் சிஷ்யனுடைய உயிர் ஆசார்யன் சொத்தென்பதறியலாம். என்றுமொக்க அடிமைகொள்ளும் மஹோபகாரன் என்றது அறியாக்காலம் அறிந்தகாலம் என்ற வேறுபாடில்லாமல் எப்பொழுதும் ஒரு தன்மையாக அடிமைகொள்ளும் சிறந்த உபகாரன் என்றவாறு. அறியாதன வறிவித்து ஆத்மாவை எம்பெருமான்றன் திருவடியிற் சேர்த்து உய்விக்கச் செய்பவனுதலால் ஆசார்யன் மஹோபகாரனுவான். ஆசார்யனை நினைப்பான் என்றது ஆசார்யனை இவ்வாறு நினைக்கக்கடவன் என்றவாறு.

(8) நம்முடைய ஸர்வாபராதத்தையும் பொறுப்பித்து என்றது நாம் செய்த எல்லாக்குற்றங்களையும் பொறுக்கும்படிசெய்து என்றவாறு. எம்பெருமான் அபராதமுடைய சேதனனைக்கண்டு வெறுக்கின்ற காலத்தில் பெரிய பிராட்டியார் எம்பெருமானை நோக்கி அந்தோ! உலகத்தில் அபராதஞ்செய்யாதவர் யாருளர்? நீர் இப்பொழுது இந்தச் சேதனனை வெறுத்தகற்றிவிட்டால் இவனுக்கு வேறு புகலிடம் யாதுளது? மேலும் நீர் இப்படி அகற்றினுல் வேறெவர் தாம் உம்மை யடையப்போகிறார்கள்? இனி இவன் செய்த அபராதங்களிற் கருத்தைச் செலுத்தாமல் இவனை அங்கீகரித்தருளும் என்று ஹிதமான சொற்களைக்கூறி பொறுக்கும்படி செய்வாள். ஈசுவர ஸ்வாதந்த்ர்யத்தைக் குலைத்து என்றது எம்பெருமானுடைய ஸ்வாதந்த்ர்யகுணத்தை யகற்றி என்றவாறு. எம்பெருமான் தன் ஸ்வாதந்த்ர்யகுணத்தால் அபராதமுடைய சேதனனைச் சிக்ஷிக்கத்துணிகின்றகாலத்தில் பிராட்டியார் தன்னிகவசனங்களால் அந்த ஸ்வாதந்த்ர்யத்தை யகற்றிவிடுவாளாதலால் ஸ்வாதந்த்ர்யத்தைக் குலைத்து என்று சொல்லப்பட்டது. அவனுடைய காருண்ய வாத்ஸல்யாதிகுணங்களைக்கிளப்பி என்றது ஸர்வேசுவரனுடைய அருள் வாத்ஸல்ய முதலிய குணங்கள் வெளித்தோன்றும்படி செய்து என்றவாறு. அபராதமுடைய சேதனரைக்கண்டு எம்பெருமானுக்குச் சீற்றமுண்டானபோது

யாதிகுணங்களைக்கிளப்பி, நமக்குப்புருஷகாரபூதையாய், மாதாவாய், ஸ்வாமிநியாய், ப்ராப்யையாயிருக்குமென்றுபிராட்டியை நினைப்பான்.

(9) சிருஷ்டி காலத்திலே ச்ரீரத்தையும் இந்திரியங்களையுந் தந்து, அந்தர்யாமியாய் நின்று ஸத்தையை நோக்கி, அத்வேஷத்தை

அவனுடைய அருள் முதலிய குணங்கள் வெளித்தோன்றுமலடங்கிக் கிடக்கும். அப்பொழுது பிராட்டியார் ஸர்வேசுவரனை நோக்கி நீர் கருணையங்கடலாயும், அடியார்களின் குற்றங்களைப் போக்யமாகக்கொள்பவராயும் விளங்குகின்றீர் என்பது பிரஸித்தியன்றோ! இப்பொழுது இந்தச் சேதனர்களை உமது சீற்றத்திற்கு விஷயமாக்கினுல் இவர்கள் உய்யும்வகை எங்ஙனம்? மேலும் இங்ஙனம் சீற்றங்கொள்வீரேல் இனிக் கருணையங்கடலென்று எங்ஙனம் விளங்குவீர்? இனியேனும் இவர்களுடைய அபராதங்களை உமது கருணை முதலிய குணங்கட்குவிஷயமாக்கிப் பொறுத்துக்கொள்வீரென்று இன்னுரை கூறியவுடன் முன் சீற்றத்தாலடங்கிக்கிடந்த கருணை முதலிய குணங்கள் வெளிப்படுமாதலால் வாத்ஸல்யாதி குணங்களைக் கிளப்பியென்று சொல்லப்பட்டது. நமக்குப் புருஷகாரபூதையாய் என்றது நமக்காக என்றுபேசுமவளாய் என்றவாறு. ஈசுவரன் சேதனரது குற்றங்கண்டு வெறுத்தகற்றுகின்ற காலத்தில் இவர்களை எவ்வாருவது அங்கீகரிக்கவேண்டுமென்று பல இன்னுரைகூறிப் பரிந்து சிபார்சுசெய்வாளாதலால் புருஷகாரபூதையாய் என்று சொல்லப்பட்டது. மாதாவாய் என்றது தாயாய் என்றவாறு. ஸர்வலோக சரண்யனுகிய எம்பெருமானுக்குப் பத்நியாதலால் இவளும் ஸர்வலோகமாதாவாயிருப்பாள். ஸ்வாமிநியாய் என்றது பிள்ளைகளாகிய சொத்தையுடையவளாய் என்றவாறு. பிராட்டியார் ஸர்வலோகமாதாவாயிருக்கின்றுளாதலால் ஸர்வலோகத்திலுமுள்ள எல்லாச்சேதனர்களும் பிராட்டியாருடைய புதல்வர்களாவார்கள். இப்புதல்வர்களையுடையவளாயிருப்பதால் ஸ்வாமிநியாய் என்று சொல்லப்பட்டது. ப்ராப்யையாயிருக்கும் என்றது பிரயோஜனபரையாயிருப்பாளென்றவாறு. எல்லோரும் பிராட்டியாரைப் புருஷகாரமாகப்பற்றி எம்பெருமான் திருவடியையடைந்து உஜ்ஜீவிக்கவேண்டியதிருப்பதால் ப்ராப்யையாய் என்று சொல்லப்பட்டது. 'எல்லார்க்கும் இவளைப்பற்றி ஸ்வரூப லாபமாய்'' என்று அருளிச்செய்ததும் இங்கறியத்தக்கது. பிராட்டியை நினைப்பான் என்றது பெரியபிராட்டியாரை இவ்வாறு கருதக்கடவன் என்றவாறு.

(9) சிருஷ்டிகாலத்திலே சரீரத்தையும் இந்திரியங்களையும் தந்து என்றது உலகத்தைச் சிருஷ்டிக்கின்றகாலத்தில் ஆத்மாக்களுக்குச் சரீரங்களையும் கரணங்களாகிய இந்திரியங்களையுங் கொடுத்து என்றவாறு. ஆத்மாக்கள் மெழுகிலொட்டிய பொன்னைப்போல உருமாய்ந்து மூலப்ரக்ருதியில் கிடந்த காலத்தில் பரமகாருணிகனுகிய ஸர்வேசுவரன் இவை தன்னை யறிந்துய்வதற்காக இவற்றிற்குச் சரீரேந்திரியாதிகளைக் கொடுத்தானென் றறியத்தக்கது.

யும் ஆபிமுக்யத்தையும் ஸத்ஸங்கதி துடக்கமான ஆத்ம குணங்களை யும் பிறப்பித்து ஸதாசார்யனேடே சேர்த்து, நம்முடைய ஸர்வாப ராதங்களையும் பொறுத்து, ஸம்ஸார ஸம்பந்தத்தையும் கழித்து, அர்ச்சராதி மார்க்கத்தையும் பரமபதத்தையும் குணுநுபவத்தையுந் தந்து, யாவதாத்மபாவி நித்ய கைங்கர்யங்கொள்ளும் ஸ்வாமி என்று ஸர்வேசுவரனை நினைப்பான்.

அந்தர்யாமியாய் நின்று ஸத்தையேநோக்கி என்றது உள்ளேயிருந்து நியமிப் பவனும் நின்று ஆத்மாக்கள் நிலைபெறுதலை ஆராய்ந்து என்றவாறு. ஸர்வேசு வரன் தன் சக்தியால் எங்கும் நிறைந்து நில்லாதபோது யாதும் நிலைபெற் றிராது. அவனுடைய நித்யேச்சையாலன்றே ஆத்மாக்கட்கு நித்யத்வ முள்ளது. "உகைக்குமேல், எத்தேவர் வாலாட்டும் எவ்வாறு செய்கையும் அப்போதொழியும்" என்றபடி அவன் உபேக்ஷித்தால் சக்திமான்களுடைய சக்திகளெல்லாம் அழிந்துவிடுமென்றே! அத்வேஷத்தையும் என்றது த்வேஷ மின்மையையும் என்றவாறு. ஆபிமுக்யத்தையும் என்றது எதிர்முகமாக்கலு மென்றவாறு. நெடுநாள் ப்ரக்ருதிவாஸனையால் பகவத் விஷயத்தில் சிறிதும் எறிட்டுப்பாராமல் முகத்தை மாறவைத்துக்கொண்டு போந்தவனை ருசியுண் டாக்கி எதிர்முகமாகப் பார்க்கும்படி செய்வதாம். ஸத்ஸங்கதி துடக்கமான ஆத்ம குணங்களையும் பிறப்பித்து என்றது ஸத்துக்களுடைய தொடர்பு முதலான ஆத்ம குணங்களையுமுண்டாக்கி என்றவாறு. ஸதாசார்யனேடே சேர்த்து என்றது எப்பொழுதும் ஹிதோபதேசஞ்செய்யும் ஆசார்யனிடத் திற்சேர்த்து என்றவாறு. நம்முடைய ஸர்வாபராதங்களையும் பொறுத்து என்றது நாம் செய்த எல்லாப் பாபங்களையும் பொறுத்து என்றவாறு. காருண்யரூபையான பெரியபிராட்டியாரும் 'இந்தச் சேதனன் மஹாபாபதஞ் செய்தவன்; இவனை ஒருபொழுதும் அங்கிகரிக்கலாகாது' என்று குற்றங்களை எடுத்துக்காட்டியவிடத்திலும் 'என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்' என்று பிராட்டியாரோடு மறுதலித்துப் பொறுத்துக்கொள்ளும் இயல்பினனென்பதாம். ஸம்ஸாரஸம்பந்தத்தையுங் கழித்து என்றது பிறந் திறந்துழல்கிற மஹா துக்கத்தையுமொழித்து என்றவாறு. அர்ச்சராதி மார்க் கத்தையும் என்றது பரமபதத்திற்குச்செல்லும் வழியையும் என்றவாறு. பரம பதத்தையும் என்றது ஒப்புயர்வற்ற ஸ்தானமாகிய தெளிவிசும்பையும் என்ற வாறு. குணுநுபவத்தையும் தந்து என்றது தன்னுடைய ஆநந்த குணுநுபவத் தைக்கொடுத்து என்றவாறு. யாவதாத்மபாவி என்றது ஆத்மாவுள்ளளவும் என்றவாறு. நித்ய கைங்கர்யங்கொள்ளும் ஸ்வாமி என்றது நித்ய பணிவிடை யைக்கொள்ளுகின்ற ஸ்வாமி என்றவாறு. ஸர்வேசுவரனை நினைப்பானென் றது எம்பெருமானை இங்ஙனம் கருதக்கடவன் என்றவாறு.

ஸ்ரீ:

பக்தி நிரூபணம்.

[இது ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(181-ம் பக்கத்தொடர்ச்சி.)

"வீடுமின்முற்றவும்" ப்ரவேச விஷயம்.

பக்தி நிரூபண ப்ரஸங்காத் ப்ரஸ்துதமான "வீடுமின்முற்றவும்" ப்ரவேச விஷயம் விசாரிக்கப்படுகிறது. "வீடுமின்முற்றவும்" என்கிற திருவாய்மொழியை ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீபாஷ்யம் தலைக்கட்டினபின்பு பக்திபரமாக நிர்வஹித்ததாக அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த பக்தி ஸாத்யபக்தியோ ஸாதநபக்தியோவென்று விசாரித்து, ஆழ்வார் மயர்வறமதிநலம் அருளப்பெற்றவராகையாலே ஈசுவரகிருபாபலமான பக்தியாகையாலே அந்த பக்தியையே உபதேசித்ததாகக்கொள்ளவேணும்; அப்படிக்கில்லாமல் ஸாதநபக்தியையே உபதேசித்ததாகக்கொள்ளில் அபசூத்ராதிகரண விரோதம் வருமென்றும், ஆழ்வாருடைய ப்ரபாவத்தாலே கூடுமென்னில், தனக்குக் கிடைத்தது பலபூதபக்தியாயிருக்க ஸாதநபக்தியை உபதேசிக்கும்பக்ஷத்தில் விப்ரலம்பகோடியிலாவரென்றும் அருளிச்செய்கையாலே திருவாய்மொழியில் உபதிஷ்டையான பக்தி பலரூபை என்றே கொள்ளவேணும். "ஸ்ரீபாஷ்யம் தலைக்கட்டினபின்பு" என்றிருக்கையாலே ஸ்ரீபாஷ்யமும் பலபூதபக்திபரமாகவே கொள்ளவேணும்.

அப்படிக்கொள்ளும்பக்ஷத்தில் தத்யவ்யாக்யாநத்தில் ஸ்ரீபாஷ்யம் ஸாதநபக்திபரமென்று பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்திருப்பது விருத்தமாய்; மேலும் திருவாய்மொழியையே பலபக்திபரமாகச் சொல்லும்பக்ஷத்தில், "சார்வேதவநெறி" ப்ரவேசத்தில் திருவாய்மொழியில் ப்ரதிபாதிக்கப்படுகிற பக்தி த்ரைவர்ணிகாதிகாரை என்றும் ஸாதநபூதை என்றும் நிர்வஹிக்கப்பட்டிருக்கிறது.

அது நிற்க ஆசார்ய ஹ்ருதயத்திலும் (முதல்பத்துச் சூர்ணையில்) "பஜனத்தில் முதல்பத்தில் சேர்க்கிறார்" என்றும், (இரண்டாம்பத்து சூர்ணையில்) "அந்தர்கதகுணோபாஸநத்தை" என்று தொடங்கி, "க்ஷேத்ரவாஸஸங்கீர்த்தநாஞ்ஜலி ப்ரதக்ஷிணகதி சிந்தநாத்யங்கயுக்தமாக்குகிறார் இரண்டாம்பத்தில்" என்றும், (ஆறும்பத்துச் சூர்ணையில்) "பிணக்கறத்துடங்கி வேதப்புநித் விழுதி சொன்ன ஸாத்யோபாய ச்ரவண ஸசோக ஸஜாதீயர்க்கு நந்தனன் மற்றோர் களைகணிலம் புகுந்தேன் என்று ஸ்வஸித்தோபாய நிஷ்டையை உக்த்யநுஷ்டானங்களாலேகாட்டுகிறார் ஆறும்பத்தில்" என்றும் அருளிச்செய்திருப்பதால் ஸாதநபூதபக்தியை ஆழ்வார் உபதேசித்தாரென்றுமிருக்கிறது. ஆதலால் இந்த க்ருந்தங்களைப் பரிசீலிக்க வேண்டியது ஆவசியகமாகையால் யதாமதிபரிஹாரவிஷயம் நிரூபிக்கப்படுகிறது.

ஆழ்வாருக்குக்கிடைத்த பக்தி ஈசுவரகிருபாபலமாயிருப்பதால் அந்த ப்க்திபாரவச்யத்தாலே அநுஷ்டிதையான ப்ரபத்திபாரவச்யத்தாலேற்பட்டஆர்த்தியதிசயத்தாலேற்பட்டதாயிருப்பதால் அந்த ப்ரபத்தி ஆர்த்தப்ரபத்தியாகையாலே இந்த ஆர்த்தப்ரபத்தி "கார்யே காரணோபசார:" என்கிற ந்யாயத்தாலே ஸாத்யபக்தி என்றே வ்யவஹரிக்கப்படும். ஆதலால் ஆளவந்தார் நிர்வாஹத்தில் ப்ரபத்திபரமாக நிர்வஹித்திருப்பதும், பாஷ்யகாரர் ஸாத்யபக்திபரமாக நிர்வஹித்திருப்பதும் அவிருத்தமாகையால் இரண்டு நிர்வாஹமும் கூடும்.

ஸாதநதயா அநுஷ்டேயமானையான பக்தி த்ரைவர்ணிகாதிகாரையாயும், ஸர்வாதிகாரையாயுமிருக்குமென்று கீழ் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே ப்ரபத்தி அதிகாரி விசேஷணமாயிருக்குமாப்போலே பக்தியும் அதிகாரி விசேஷணம் என்கிற ஸித்தாந்தத்திலும் அதிகாரி விசேஷணீபூதபக்தியும் ஸாதநபக்திபோலே த்ரைவர்ணிகாதிகாரையாயும், ஸர்வாதிகாரையாயுமிருக்கும். அதைப்பற்றவும் ஸித்தோபாயவரணரூபையான ப்ரபத்தியை ஸாதனம் என்று வ்யவஹரிப்பதுபோல் பக்திக்கும் ஸாதநத்வவ்யபதேசம் கூடும்.

ப்ரபத்தி ஸ்தலத்திலும் ப்ரபத்தி விஷயமாக ஈசுவரகதமான உபாயத்வத்தை உபசரித்துச் சொல்லுவதும், அநந்யதாஸித்தத்வ

கடிதமான அவ்யவஹிதபூர்வ நியதவ்ருத்தித்வத்தையும் அவலம்பித்து வ்யவஹரிப்பதும்போல் பக்தி ஸ்தலத்திலேயும் வ்யவஹரிக்கும்படியாயிருக்கும். ப்ரபத்தி விதி ஸ்தலங்களில் விதயர்த்தம் கேவலக்ருதிஸாத்யதையாகையாலே விதியாலே இஷ்டஸாதநத்வம் ஏற்படாததுபோல் பக்தி ஸ்தலத்திலேயும் கேவலக்ருதி ஸாத்யத்வமே விதயர்த்தமாகலாம்.

அங்ஙனமன்றிக்கே பக்தியை ஆராதநரூபையாகச் சொல்லியிருப்பதால், ஆராதனமாவது ஸ்வயம்ப்ரயோஜநப்ரீதி ஜநகவ்யாபாரமாகையாலே இஷ்டஸாதநத்வத்தை விதயர்த்தமாகக்கொள்ளினும் ஸ்வயம்ப்ரயோஜன ப்ரீதி ரூப இஷ்டஸாதநமாகையாலே விரோதமில்லை.

ஈசுவரனையே காரணமாக பஹுப்ரமாணங்கள் சொல்லுகையாலே காரணம் காரணாந்தர நிரபேக்ஷமாகையாலே பக்திக்குப் பல காரணத்வம் கூடாமையாலும் கீழ்நிரூபித்தபடியே கொள்ள வேணும்.

மேலும் “யமேப்யோ லோகேப்யோ உந்நிநீஷதி தம் ஸாதுகர்ம காரயதி” “யமேப்யோ லோகேப்யோ உந்நிநீஷதி தம் ஸாதுகர்ம் காரயதி” என்கிற சுருதியாலே அநுகூலவிஷயத்தில் ப்ரதமப்ரவ்ருத்தனான ஈசுவரனே உந்நிநீஷாரூபையான உபாஸநநிஷ்பத்தியைச் செய்யுமென்கையாலே ஸித்தோபாயமான ஈசுவரனுடைய ப்ரஸாதத்திற்கு பலமான உபாஸநநிஷ்பத்தி ஈசுவரனுடைய ப்ரஸாதசாதனமென்று சொல்லுவது கூடாமையாலும், “தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் । ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே” “ஏஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம், ததாமிபுத்தியோகம்தம் ஏநமாமுபயாந்திதே” என்கிற ப்ரமாணத்தின்படி தன்னுடைய ப்ராப்திக்கு ஸாதநமான புத்தியோகத்தைத் தானே கொடுப்பதாக அருளிச்செய்கையாலும், பக்தி அஹேதுத்வேஸதி அதிப்ரஸங்கவாரகமான வ்யாஜமென்றும் அதிகாரி விசேஷணமென்றும் சொல்லுவது உபபந்நம்.

ஆக உபாயதயா அநுஷ்டேயமானேயான பக்தியைக்காட்டிலும் வ்யாஜமாயும், அதிகாரி விசேஷணமாயுமுள்ள பக்தி ப்ரமாண ஸித்தையென்று ஏற்படுகிறது.

ஆனல் பக்தியை உபாயமாக விதிக்கிற சாஸ்திரங்களுக்கு ப்ரயோஜன மென்னென்னில் "த்ரைகுண்யவிஷயா வேதா:" "த்ரைகுண்யவிஷயா வேதா:" என்கிறபடியே ஸத்வாதிகுணங்களுக்கு அநுகுணேயாக ஏற்படுகிற ருசியை அநுஸரித்து "மாதா பித்ருஸஹஸ்ரேப்யோ வத்ஸலதரம் சாஸ்த்ரம்" "மாதர்பித்ருஸஹஸ்ரேப்யோ வத்ஸலதரம் சாஸ்த்ரம்" என்கிறபடியே சியேந யாகம் முதலியவற்றை விதிப்பதுபோல் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வய நிவ்ருத்திரூபமான அத்யந்தபாரதந்த்ரியஜ்ஞானமில்லாத சேதனர்களேக்குறித்து உபாயதயாவிதித்து, தேஹாத்மாபிமானம், ஸ்வஸ்வாதந்த்ரியம், அந்யசேஷத்வம் இவைகளை நிவர்த்திப்பித்து எல்லாவற்றிற்கும் மேலான பாரதந்த்ரியஜ்ஞானத்தை ஜநிப்பிக்கைக்கு ஏற்பட்ட வழி.

இத்தை அநுஸரித்தே "நெறிகாட்டி நீக்குதியே" என்று ஆழ்வாரும், "மதுராபிந்துமிச்ரமான சாதகும்பமயகும்ப கத தீர்த்தஸலிலம்போலே அஹங்காரமிச்ரமான உபாயாந்தர"மென்றும், "தன்னுல் வரும் நன்மை விலைப்பால்போலே அவனுல் வரும் நன்மை முலைப்பால்போலே" என்றும் திருக்குருகைப்பிரான்பிள்ளானும் அருளிச்செய்திருப்பதையும் கண்டுகொள்க.

ஸ்ரீ பாஷ்யம் ஸாத்யபக்திபரமாக இருக்கவேண்டுமென்பது ஈட்டிவிருந்தபோதிலும் பெரியவாச்சான்பிள்ளை கத்யவ்யாக்யானத்தில் ஸாதநபக்திபரமாக அருளிச்செய்தது சரமசுலோகத்திற்கு அங்க ப்ரபத்தியில் தாத்பர்யமென்று கீதாபாஷ்யத்திலிருந்தபோதிலும் கத்யத்தில் ப்ரபத்திபரமான நிர்வாஹத்திற்கு யோஜநாபேதமாக நிர்வஹித்ததுபோல் இங்கும் கொள்ளவேணும்.

சரமசுலோகத்திற்கு ஸ்வதந்த்ர ப்ரபத்திபரமான நிர்வாஹத்தில்தான் முக்கிய தாத்பர்யம் என்பதுபோல ஸ்ரீபாஷ்யமும் ஸாத்ய பக்திபரமென்பதில்தான் முக்ய தாத்பர்யம். அது எப்படியென்றால்

மங்கள சுலோகத்தில் ‟ஶேமுஷீ ஭க்திரூபா” ‟சேமுஷீ பக்தி ரூபா” என்று ப்ரார்த்தித்தபடியாலும், ‟ஸ்மர்யமாணாத்யர்த்த ப்ரியத்வேந ஸ்வயமபி அத்யர்த்த ப்ரியா” ‟ஸ்மர்யமாணாத்யர்த்த ப்ரியத்வேந ஸ்வயமபி அத்யர்த்த ப்ரியா” என்று லகுஸித்தாந்தத்தி லிருப்பதாலும் அத்யர்த்த ப்ரியத்வம் ஸ்மர்யமாணவிஷயத்தில் அந்யேச்சா அநதீநேச்சாவிஷயத்வரூபமென்று கொள்வதுபோல் பக்தி விஷயமாகச்சொன்ன அத்யர்த்தப்ரியத்வம் ஏவம் ரூபம் என்றே கொள்ளவேணும்.

மேலும் லகுஸித்தாந்த சுருதப்ரகாசிகையில், ‟யமேவைஷ வ்ருணுதே” ‟யமேவைஷவிவ்ருணுதே” என்கிற சுருதி வ்யாக்யாநாவஸரத்தில், ‟யஸ்ய ஸ்வத: ப்ரியதமம் வரணீயத்வம்” ‟யத்வாஸ்வத: ப்ரியத்வம் வரணீயத்வம்” என்றிருப்பதால் சேதநனுடைய ப்ரீத்யதீநமாக ஈசுவரனுடைய ப்ரீதிவிஷயத்வம் சொல்லும்பக்ஷத்தில் ஸ்வத: ப்ரியத்வம் என்பது கூடாது. ஆனால் மேல் வாக்யத்தில் ‟ஸ்வஸ்மிந்ப்ரீதிமதஏவ” என்றிருப்பது கூடும்படி எங்ஙனேயென்னில் ஸ்வவிஷயகப்ரீதிக்கும் சேதநவிஷயகப்ரீதிக்கும் ஜந்ய ஜநக பாவம் விவக்ஷிதமன்று. எப்படி தூமத்வாத் அக்நிமாந் என்கிற இடத்தில் ஜ்ஞாப்ய ஜ்ஞாபகபாவம் விவக்ஷிதமோ அப்படியே சேதனனுக்குண்டான ஈசுவரவிஷயக ப்ரீதியால் ஈசுவரனுக்கு சேதநவிஷயத்திலுண்டாகிற ப்ரீதி ஜ்ஞாப்யையாகிறது. அப்படிச் சொல்லுவதால் ‟ததாமி புத்தியோகம் தம்” ‟ததாமிபுத்தியோகம் தம்” என்கிறவிடத்தில் ப்ரீதி பூர்வகம் ததாமி என்றிருப்பதால் ஈசுவரனுடைய ப்ரீதி கார்யமாக புத்தியோக ப்ரதாநம் ஏற்படுவதால் ஈசுவர ப்ரீதிகார்யம் சேதநனுக்குண்டான பகவத்விஷயக ப்ரீதிரூப புத்தியோகம் என்றேற்படுகிறது ‟யமேப்யோ லோகேப்ய உந்நிநீஷதி” ‟யமேப்யோ லோகேப்யோ உந்நிநீஷதி” என்கிற சுருதியிலும் சேதனனுடைய உந்நிநீஷா கார்யமான உபாஸநத்தில் ப்ரதம ப்ரவ்ருத்தன் ஈசுவரனுகையாலே எப்படி ‟க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்து” என்கிற ஸூத்ரத்தின்படி ப்ரதம ப்ரவ்ருத்தனான சேதனனுக்கு பலபாக்த்வம் ஏற்படுமோ அப்படி இங்கும் ஈசுவரனுக்கே பலபாக்த்வம் ஏற்படுகிறது. அப்படியிருப்பதாலே தன்னு

டைய க்ருஷிபலமான பக்தியுடைய சேதனனுடைய லாபம் ஈசுவர னுக்கென்றே ஏற்படுகிறது. ஆதலால், "𑌯𑌸𑍍𑌯𑌾𑌯𑌂 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 𑌸𑌏𑌵𑌾𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌮𑍋𑌭𑌵𑌤𑌿" "யஸ்யாயம் நிரதிசய: ப்ரிய: ஸஏவாஸ்ய ப்ரியதமோபவதி" என்கிறவிடத்திலும் ஜ்ஞாப்ய ஜ்ஞாபக பாவமே விவக்ஷிதம்.

ஆனால் "𑌅𑌪𑌵𑌰𑍍𑌗𑌸𑌾𑌧𑌨𑌭𑍂𑌤𑌾𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌶𑌿𑌨𑌷𑍍𑌟𑌿" "அபவர்க்கசாதநபூதாம் ஸ்ம்ருதிம் விசிநஷ்டி" என்பது கூடும்படி எங்ஙனேயென்னில் போஜநக்ஷுத்பாயேந பக்தி நியமேந பூர்வ வ்ருத்தியாகையாலும், ஸ்வயம்ப்ரயோஜநப்ரீதி ஸாதநமான பக்தியே நெற்செய்யப் புல்தேயுமாப்போலே ப்ரஸங்காத் உபகாரகத்வத்தைப் பற்றவும் வ்யவதேசம் கூடும். இப்படியிருப்பதால் தான் ப்ரஹ்ம வித்யாஸாமர்த்யம் ஸர்வபாப ப்ராயச்சித்தமாக ஏற்படுகிறதென்பதும், ப்ராயச்சித்த புத்யா அநுஷ்டாநமில்லாமற் போனாலும் ப்ராயச் சித்தமாகிறதென்பதும் ஸங்கதமாகிறது.

பாபம் ஈசுவரநிக்ரஹ ரூபமாகையாலே அந்த நிக்ரஹ நிவ்ருத்தி ரூப ப்ராயச்சித்தபலத்தை உத்தேசித்து அநுஷ்டிக்காமலிருந்த போதிலும் அர்த்தாத் நிக்ரஹ நிவ்ருத்தி ஏற்படுகிறதென்று தெரி கிறது.

பக்திக்கு ஸாதநத்வம் சொல்லும்பக்ஷத்தில் ஸாதநத்வம் அநிஷ்ட நிவ்ருத்திபூர்வக இஷ்டஸாதநத்வரூபமாகையாலே அநிஷ்டநி வ்ருத்திரூப ப்ராயச்சித்த பலோத்தேச்யகத்வம் பக்திக்குச் சொல் லும் பக்ஷத்தில் அர்த்தாத் ப்ராயச்சித்தபலம் ஏற்படுகிறதென்பது கூடாது. ஸ்வயம்ப்ரயோஜனபூதையான பகவத் ப்ரீதிக்கு ஸாதந மாக இவன் பக்தியை அநுஷ்டிக்கையாலே நிக்ரஹ நிவ்ருத்தி அர்த் தாத் ஏற்பகிறது.

அப்படியே ஸ்ரீபாஷ்யத்தில் ததிகமாதிகரண விசாரத்தில் "𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑍇𑌦𑌿𑌤𑌃 𑌵𑍇𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌸𑍍𑌵𑌯𑌮𑌪𑌿 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑌤𑍀 𑌵𑍇𑌦𑍍𑌯𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌿𑌤 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌘𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌥𑌾, 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌾𑌵 𑌸𑌂𑌜𑌯𑌜𑌨𑌿𑌤 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌘 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌯𑌤𑌿" "தமேவம் வித்யாவேதித: வேத்

யர்த்யர்த்த ப்ரியத்வேந ஸ்வயமபிநிரதிசய ப்ரியாஸதீ வேத்யபூத பரமபுருஷாராதந ஸ்வரூபா, பூர்வக்ருதாக ஸம்ஜயஜநித பரம புருஷா ப்ரீதிம் விநாசயதி" என்றிருக்கிறது. இதனால் வித்யாவேத்ய னன ஈசுவரனுடைய அத்யர்த்த ப்ரியத்வத்தாலே தானும் வித்யா நிஷ்டனுக்கு அத்யர்த்த ப்ரியையாய்க்கொண்டு ஸ்வயம் ப்ரயோஜன ப்ரீதிஜநக வ்யாபாரரூப பகவதாராதநபூதையாய் ஸ்வக்ருத பாபத் தாலே உண்டாயிருக்கிற ஈசுவரனுடைய அப்ரீதியை நசிப்பிக்கிறது என்று ஏற்படுகிறபடியால் ஆராதநத்வேந அநுஷ்டிதையான பக்தி யானது அப்ரீதிரூப நிக்ரஹநிவர்த்தியைப் பண்ணுகிறதென்றேற் படுகிறது. எப்படி புத்ரனானவன் பிதாவினுடைய ஆராதநத்தாலே பிதாவினுடைய அப்ரீதியை நிவர்த்திப்பிக்கிறானே அப்படியே தனக்கு ஸ்வரூப ப்ராப்தமான பக்திரூப பகவதாராதனத்தைச் செய்ய ஈசுவரனுடைய அப்ரீதி அர்த்தாத் நிவர்த்தையாகிறது.

அங்ஙனமன்றிக்கே "ஹஜநஸுவம் வைகவஸு விவாயம் ஸுவஸுவம் கூதமூ லேவ்யம்" "பஜநசுகம் ஏகஸ்ய விபுலம் ஸுஸுகம் கர்த்து மவ்யயம்" இத்யாதிப்படியே அத்யர்த்த ப்ரியை யான பக்தியை ஸாதநமாக்குவது பதிவ்ருதையான ஸ்திரீயானவள் பர்த்ருபோகத்தை வயிறு வளர்க்கைக்கு உறுப்பாக்குவதுபோல் ஸ்வரூப ஹாநிகரம்.

இதை யநுஸரித்தே ஸ்ரீபாஷ்யத்தில் பலாத்யாயோபக்ரமத் தில் பக்தி விசாரம்செய்து பக்தி பலரூபையாகையாலே ஸங்கதம் என்று சுருதப்ரகாசிகையில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படி பக்தி பலரூபை என்பதற்கு அநேக ப்ரயாணோபபத்திகளிருப்பதால் ஸாத்யபக்திபரம் ஸ்ரீபாஷ்யம் என்று ஏற்படுகிறது. இந்த விசா ரத்தை விஸ்தரபயத்தாலே இத்தோடு நிறுத்தி விட்டேன்.

ஆக இப்படி ஆழ்வாருக்குக்கிடைத்த பக்தி ஸாதநகோட்யநநு ப்ரவிஷ்டையாய் கீழ் நிரூபித்தபடி ஸாதநத்வ வ்யபதேசார்ஹையாய் அதிகாரி விசேஷணமாயிருப்பதால், இவரால் உபதிஷ்டையான பக்தியும் கீழ் நிரூபித்தபடி வ்யபதேசார்ஹையாய் ப்ரதக்ஷணத்யங்க யுக்தையாய் அநுஷ்டிக்கப்படுமதான அதிகாரி விசேஷணீபூதையாய் ஸர்வாதிகாரையாயிருப்பதாலே ஆசார்ய ஹ்ருதயத்தில் பஜனமென்

றும், ஸாத்யோபாயமென்றும் அருளிச்செய்யப்பட்டிருக்கிற பக்தியும் இதுதானென்று கொள்ளவேணும்.

ஆனால் அதிகார விசேஷணீபூதையான பக்தியை ஸாத்யோபாயமென்று வ்யவஹரிப்பது கூடுமோவென்னில் அந்த பக்தி அதிகாரி விசேஷணதயா அநுஷ்டிக்கப்படுவதாகையாலே க்ருதிஸாத்யையாயிருக்கையாலும், அந்த பக்திவிஷயமான ஈசுவரனுடைய உபாயத்வத்தை இதில் உபசரித்துச் சொல்லுவது கூடுமாகையாலும் உபபந்நம்.

ஒன்பதாம்பத்துச் சூர்ணையில் "வைகல்வாழ்தலான ஸித்தோபாயம்" என்று தொடங்கி, "நெறியெல்லாமுறைக்கிறார்" என்கிறவிடத்திலும் இப்படியே கொள்ளவேணும். அதில் தூர்ப்பலபுத்திகளுக்கு, "மாலைநண்ணி காலை மாலை வாடாமலரிட்டு அன்பராம் ஸாங்க பக்தி; அதிலசக்தர்க்குத் தாளடையும் ப்ரபத்தி" என்கிறவிடத்தில் ஸித்தோபாயமென்பது ஸித்தோபாயவரணரூபையான ப்ரபத்தியைச்சொல்லுகிறது. அந்த லகுப்ரபத்தியில் விசுவாஸமில்லாத அதிகாரிகளுக்கு அதிகாரி விசேஷணதயா அநுஷ்டியமானையான பக்தி என்றும், அந்த பக்த்யநுஷ்டானத்தில் அசக்தர்களாயிருப்பவர்களுக்கு ததேகோபாயத்வாத்யவஸாயரூப ப்ரபத்தியைக்காட்டிலும் வேறுபட்டதாய் ததேக ரக்ஷ்யத்வாத்யவஸாயரூபையான ப்ரபத்தி என்றும் கொள்ளவேணும்.

ஆனால் ததேகரக்ஷ்யத்வாத்யவஸாயரூபையான ப்ரபத்தி உபாயமானாலும், இவ்விடத்தில் விவக்ஷிதம், ப்ரபத்தியில் அவாந்தரபேதமான தாந்த்ரிக ஷடங்கயோகமென்றும், "ஓமித்யாத்மாநம்யுஞ்ஜீய" "ஓமித்யாத்மாநம்யுஞ்ஜீய" என்று சுருதியில் சொல்லப்படுகிற த்ரைவர்ணிகாரையான ந்யாஸவித்யைஎன்றும் ஏற்பட்டிருக்கிறது.

அதில் ஷடங்கயோக ப்ரபத்தி ததேகரக்ஷ்யத்வாத்யவஸாயரூபை. அதில் ஆநுகூல்யஸங்கல்பாதிகள் அங்கங்கள். ஸித்தோபாயவரணரூபையான ப்ரபத்தியில் ஸம்பாவிதஸ்வபாவங்களங்கங்கள். ஷடங்கயோகத்திற்குக் காரணம் மூலமந்த்ரம். ந்யாஸவித்யைக்குக் காரணம் ப்ரணவம்.

இதுவுமன்றியில் பலபூதபக்தி, பலபூதப்ரபத்தி என்பதுபோல பலபூதஷடங்கயோகம், பலபூதந்யாஸம் என்றும் ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் தாளடையும் ப்ரபத்தி பலபூதையாகக் கொள்ள வேணும். ஸ்ரீபாஷ்யத்தில் ந்யாஸவித்யைக்கு அங்கம் புருஷவித்யை என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. லோகதேசிகனும், தேசிகனும் அந்த புருஷவித்யா. ப்ரதிபாதிகையான "தஸ்யைவம் விதுஷ:" "தஸ்யைவம் விதுஷ:" என்கிற சுருதியை ப்ரபத்தி ஸ்துதிபரையாக நிர்வஹித்திருக்கிறார்கள். இப்படி ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸூக்திக்கும் இவர்களுடைய ஸூக்திகளுக்கும் விரோதம் ஏற்படுகிறது. புருஷவித்யை அங்கமாக ஏற்படுகிறது. ஸாதநபூத ந்யாஸவித்யையில் ஸ்துதி பலபூதந்யாஸவித்யா விஷயம் என்று விரோத பரிஹாரம் கண்டுகொள்வது.

"சார்வேதவநெறியில்" த்ரைவர்ணிகாதிசாரையாயும் ஸாதநபூதையாயும் நிர்வஹித்திருப்பதற்கு அபிப்பிராயம் – இந்த பக்தியே வேதாந்த வாக்யார்த்த ஜ்ஞான ஜந்ய த்ருவாநுஸ்ம்ருதிரூபையாகும் பக்ஷத்தில் த்ரைவர்ணிகாதிகாரையாயும், ஸாதநத்வ வ்யபதேசார்ஹையாயுமிருக்கும் என்பதாம்.

ப்ரபத்தியில் அவாந்தரபேதங்களுக்கு ப்ரமாணம் லக்ஷ்மீ தந்த்ரம், அஹிர்புத்ந்யஸம்ஹிதை இவைகள். அந்த ப்ரமாணோபந்யாஸத்தை விஸ்தரபயத்தால் நிறுத்தி விட்டேன்.

இப்படி கீழ் நிரூபித்தவிஷயங்கள் ஸ்ரீவசனபூஷணமீமாம்ஸை முதலான க்ருந்தங்களில் விசதமாகக் காணலாம். இப்படியான ரஹஸ்யார்த்த விஷயங்களில் ப்ராஜ்ஞராயிருப்பவர்கள் கீழ் நிரூபிக்கப்பட்டிருக்கிற விரோதத்திற்குப் பரிஹாரத்தை அருளிச்செய்தால் அதுவும் உபாதேயமாயிருக்கும்.

வ்யாதிக்கு பரிஹாரார்த்தமாக அபிமதவஸ்துக்களிலே ஔஷதத்தைக் கலசிஇடுவாரைப்போலே உபாயாந்தரங்களில் ஈசுவரனைக் கலந்து விதிக்கிறதென்று இருப்பதால் அபிமதவஸ்துக்களில் கலந்திருக்கிற ஔஷதமே ரோகநிவர்த்தகமாகிறாப்போலே இங்கும்

ஈசுவரனே ஸம்ஸாரமாகிற ரோகத்துக்கு நிவர்த்தகனுகிறுன். ஆத லால் பக்தி ப்ரபத்திகள் வ்யாஜமென்றே கொள்ளவேணும்.

(எட்டாவது சஞ்சிகையில் 206-ம் பக்கம் 10-வது வரியில் அஜ்ஞாநஸித்தையாய் என்றிருப்பதை ஆஜாநஸித்தையாய் என்று திருத்திக்கொள்க.)

(தொடரும்.)

ஸ்ரீ:

நசிகேதோபாக்யானம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் ந்யாய வேதாந்த வித்வான் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸகோபாலாசார்ய ஸ்வாமீ எழுதுவது.]

(281-ம் பக்கத் தொடர்ச்சி.)

யமதருமன் ஆத்மஸ்வரூபத்தின் உண்மையைப் பலபடியாக உபதேசித்துவிட்டுப்பின் ஆத்மஸ்வரூபத்தை ஆராயாது சும்மா விருக்கின்றவர்களைக் குறித்துத் தனக்குள் சோகித்துக்கொண்டு கூறத்தொடங்கினன்.—

நசிகேதஸ்ஸே! மெய் வாய் கண் முதலிய இந்திரியங்கள் வெளியே தோற்றுகின்ற பொருள்களை மாத்திரம் அறியுமே யல்லது உள்ளே அந்தராத்மாவாய் விளங்குகின்ற பரமாத்மாவை யறிய மாட்டா. வெளியே தோன்றுகின்ற பொருள்களை யறிவதற்காகவே பரமாத்மா மெய் வாய் முதலிய இந்திரியங்களைச் சிருஷ்டித்தான். இந்திரியங்களின் இயல்பு இங்ஙனமிருப்பதால் உலகினர் பலர் இந் திரியங்களின் வசப்பட்டு அல்லலுறுகிறார்கள். நதிப்பெருக்கிலகப் பட்ட பலருள்ளும் வலியுடைய ஒருவனே எதிர்த்து நீந்திச்சென்று கரை காணுகிறுன். அதுபோல மோக்ஷத்தை விரும்புகிற பலருள் ஒருவனே இந்திரியங்களைத் தன் வயப்படுத்திப் பரமாத்மாவையறியு மியல்பினனுகிறுன். இவனே தீரனுவான். அற்ப அறிவினர் வெளிப் படையான காம்யசுகங்களை விரும்புகின்றார்கள். இவர்கள் ஸம்ஸார

சாகரத்திற் கிடந்துழன்று தடையின்றிச் செல்லும் என்னுடைய பாசவலைக்குள்ளகப்பட்டவராவார்கள். புத்திமான்களாகிய பெரியார் அழிவுடைப்பொருள்களி னியல்பையறிந்து அவற்றில் பற்றற்றவர்களாய் நித்ய வஸ்துவாகிய பர்மாத்மாவையே பிரார்த்திக்கிறார்கள்.

மெய் வாய் முதலிய இந்திரியங்களில் பரமாத்மாவின் அநுப்ரவேசமில்லாதபோது எவன்தான் விஷயங்களின் சுகங்களை அவ்விந்திரியங்களைக் கொண்டநுபவிப்பான்? முன்பு அடையத்தக்க வஸ்துவாகக் குறிப்பிடப்பெற்ற பரமாத்மாவே உத்தமோத்தமமான வஸ்துவென்று அறிந்துகொள்வாயாக. உலகினர் ஜாக்ராவஸ்தையிலும், ஸ்வப்பனவஸ்தையிலும் இந்திரியங்களிலும் அநுப்ரவேசித்து விளங்குகின்ற பரமாத்மாவைக் கருவியாகக்கொண்டு ஜகத்தைப் பார்க்கிறார்கள். இந்த விபுஸ்வரூபனாகிய பரமாத்மாவினியல்பை அறிந்து தீரர்கள் சோகிக்கிறார்களில்லை.

கர்மபலத்தை யநுபவிக்கின்ற ஜீவர்களுள் எவன் தன் இருதயப் பிரதேசமாகிய குகையில் மூன்று காலத்திலும் வர்த்திக்கின்றவனாகிய பரமாத்மாவை நன்குணர்கிறானோ அவன் கெட்டகாரியங்களைச் செய்தவனாயிருந்தாலும் பெரியோர்களால் நிந்திக்கப்படுகிறானில்லை. * வ்யஷ்டி சிருஷ்டிக்கு முன்னுண்டானவனும், ஸர்வேசுவரனால் 'எனக்குப் பிரதிநிதியாகவிருந்து உலகை சிருஷ்டிக்கக் கடவாய்'

---

* வ்யஷ்டி சிருஷ்டியாவது.— ஒன்றிற்கொன்று வேறுபாடான தர்மத்தோடுகூடிய சிருஷ்டியாம். அஃதாவது.— தேவத்வ மனுஷ்யத்வ திர்யக்த்வ ஸ்தாவரத்வமென்ற ஒன்றுக்கொன்று ஒவ்வாத தர்மங்களையுடைய தேவ மனுஷ்ய திரியக் ஸ்தாவர சிருஷ்டியாம். வ்யஷ்டி—பிரிவு. சமஷ்டி சிருஷ்டியாவது.— வேறுபாடில்லாத சிருஷ்டியாம். சமஷ்டி—சமூகம்; சேர்க்கை. குயவன் மண்ணுருண்டையால் சட்டி பானை குடம் முதலிய பொருள்களைச் செய்வதுபோல்வது வ்யஷ்டி சிருஷ்டியாம். குட முதலிய பொருள்களைச் செய்வதற்கு வைத்திருக்கின்ற மண்ணுருண்டைபோல்வது சமஷ்டி சிருஷ்டியாம். ஸர்வேசுவரன் எல்லா உலகங்களையும் படைப்பதற்காகப் பிர்ம்மாவைப் படைத்தது சமஷ்டி சிருஷ்டியாம். அந்தப் பிர்ம்மாவைக்கொண்டு பதினான்குலகங்களையும், அவற்றிலுள்ள வஸ்துக்களையும் படைத்தது வ்யஷ்டி சிருஷ்டியாம்.

என்று ஆஜ்ஞாபிக்கப்பட்டவனுமாகிய பிர்ம்மதேவனால் ஆராய்ந்தறியப்பட்டவன் எந்த பரமாத்மாவோ அவனேதான் என்னால் முன்னுபதேசிக்கப்பட்டவன்.

கர்ப்பிணிகள் வயிற்றிலிருக்கும் குழந்தைகளை அவற்றிற்குத் தகுதியான உணவுப்பொருள்களைத்தந்து ஜாக்ரதையாக எவ்வாறு பாதுகாக்கிறார்களோ அதுபோல மஹரிஷிகள் அரணிக்கட்டையிலிருக்கும் அக்னியை நெய்யால் போஷித்துப் போற்றுகிறார்கள். அந்த அக்னியிலும் பரமாத்மா அந்தராத்மாவாய் விளங்குகிறான். அவன் வானிலுமிருக்கின்றான்; மண்ணிலுமிருக்கின்றான்; எங்கும் நிறைந்துள்ளானென்று இதுவரையிலும் கூறிய உபதேசத்தைக் கேட்ட நசிகேதஸ் தருமனை நோக்கி, ஆசார்யரே! பரமாத்மாவுக்கு ஸர்வாந்தர்யாமித்வம் கூடாது. நான் என்ற சொல்லுக்குப் பொருளாக அநுஸந்திக்கப்படுகிற ஆத்மாவுக்கு 'அஹமிஹைஹவாஸ்மி' (நான் இங்கேயேயிருக்கிறேன்) என்ற உணர்ச்சியுண்டாகிறது. இதனால் ஆத்மா எல்லாத்தேசத்திலும் எல்லாக் காலத்திலும் எல்லாப் பதார்த்தங்களிலும் வர்த்திக்கிறானென்பது எவ்வாறு கூடும்? என்று கேட்டான்.

அப்பொழுது தருமன், நசிகேதஸ்ஸே! பிர்ம்மவித்துக்களுக்குண்டாகிற உணர்ச்சியை ஸர்வாந்தர்யாமித்வத்திற்குப் பாதகமாகச் சொல்லுகின்றாயா? 'பரமாத்ம தத்வஜ்ஞானம் உண்டாகாதவர்களின் உணர்ச்சியைப் பாதகமாகச் சொல்லுகிறாயா? பிர்ம்மவித்துக்களுக்குண்டாகிற உணர்ச்சியைப் பாதகமாகச் சொல்லுவது சிறிதும் பொருந்தாது. அவர்களுக்கு "அஹம் மநுரபவம் ஸூர்யஶ்ச" "அஹமநுரபவம் ஸூர்யச்ச" (நான் மநுவாகவுமிருந்தேன் சூர்யனாகவுமிருந்தேன்) என்ற உணர்ச்சியுண்டாகும். பரமாத்மா பிர்ம்ம வித்துக்களை ஆவேசித்து நின்றபொழுது அவர்கள் தம்மை மறந்து அவனாகவே பாவித்து 'நான் மனுவாகவுமிருந்தேன்; சூர்யனாகவுமிருந்தேன்' என்று அவனுக்குள்ள ஸர்வாந்தர்யாமித்வமாகிய தர்மத்தை ஏறிட்டுக் கூறுவார்கள். இங்ஙனமிருக்கிற இவர்களது உணர்ச்சிக்கு 'நான் இங்கேயேயிருக்கிறேன்' என்பதுண்டாவதில்லை. பரமாத்ம தத்வஜ்ஞானமில்லாதவர்கட்கு 'நான் இங்கே

யே இருக்கிறேன்' என்ற உணர்ச்சியுண்டாவது இயற்கையாம். ஆத்மாவுக்கு ஸர்வாநதர்யாமித்வ மில்லையன்றோ!

ஸூர்யன் எவனிடத்திலிருந்துண்டாகின்றானோ, எவனிடத்தில் லயமடைகின்றானோ, எல்லாத் தேவதைகளும் எவனிடத்தில் நிலைபெறுகிறார்களோ அவனே பரமாத்மா. நிழலானது வடிவை விட்டு எப்படிப் பிரிவதில்லையோ அதுபோல பரமாத்மாவைவிட்டு ஓராணுவேனும் பிரிந்து நிற்பதில்லை. இத்தகைய பரமாத்மாவை பரிசுத்தமான ஒருநிலையில் நிற்கின்ற மனத்தினால் அறியவேண்டும். உபாஸகனுடைய இருதயப்பிரதேசத்தில் அங்குஷ்டவடிவினனாய்ப் பரமாத்மா பிரகாசிக்கிறான். இவனே காய்ந்தவிறகிற்பற்றிய அக்னியானது புகையின்றி விளங்குவதுபோல எல்லாருடைய இருதயப் பிரதேசத்திலும் விளங்குவதுமல்லாமல் மூன்று காலத்திலுமுள்ள வஸ்துக்களிலும் அந்தர்யாமியாய் வர்த்திக்கிறான். பர்வதசிகரத்தில் விழுந்த நீர்வீழ்ச்சி தாழ்வரையை யடைந்து பல அருவிகளாக ஓடுவதுபோல பரமாத்மாவிடத்திலுள்ள அந்தர்யாமித்வம் என்ற தர்மம் ஒன்றே ஸம்ஸாரத்தில் தேவாதந்தர்யாமித்வம், மனுஷ்யாந்தர்யாமித்வம் முதலாகப் பலவகையாகத் தோன்றினும் ஒன்றே என்றறிவாயாக.

நசிகேதஸ்ஸே! மனனசீலனான ஒருவன் பரமாத்மாவின் தத்வஜ்ஞாநத்தால் பரிசுத்தனாகி நன்னீரிற்கலந்த நன்னீரானது எவ்வாறு சுவை நிறம் முதலியன மாறாமல் கலப்பதுபோலப் பரமாத்மாவின் சாம்யதையை அடைகிறான்.

தொடரும்.

ஸ்ரீ:

அர்ச்சாவதார வைபவம்.

(219-ம் பக்கத்தொடர்ச்சி.)

(219-ம் பக்கத்தொடர்ச்சி.)

கர்மயோக நிஷ்டனுக்கும் அர்ச்சாராதனம் செய்வதில் ப்ரத்யக்ஷபலமுண்டு. இவன் ஒவ்வொரு கர்மத்தைச்செய்யும்போதும் *ஸாத்விக த்யாகஞ்செய்கிறுன். பகவதாராதனத்திலும் அது சம்பவிக்கிறது. அதனுல் இவனுக்குத் துர்க்குணங்களாகிய அஹங்கார மமகாரங்களை ஒழிப்பதற்கும் இந்த அர்ச்சாராதனம் ஹேதுவாயிருக்கும். அர்ச்சாராதனம் மனம் வாக்குக்காயம் என்ற மூன்று கரணங்களாலும் செய்வதொன்ருதலால் ப்ரபந்நனுக்கு இந்த ஆராதனமே ப்ரயோஜனமாகவிருக்கும். இந்த அர்ச்சாராதனத்தில் அஜ்ஞர்கட்குப் பலம் யாதென்னின்; விசேஷந்தெரிந்த மஹாங்கள் அர்ச்சாவதார எம்பெருமானுக்கு வாத்யாதி வைபவங்களை நடத்த அவற்றைக்கண்டு பலவகையான பிரீதியுண்டாவதே இவர்கட்குப் பலமாகும். இயல்பாகவே விஷயாந்தரங்களில் விருப்புடைய இவர்கட்கு வாத்ய முதலியவைகள் விஷயாந்தர விருப்பத்தை விளைவிக்குமென்னவொண்ணுது. வெல்லத்தில் 'மருந்தைவைத் தருண்டை செய்த வஸ்துவானது குழந்தைகட்குப் போக்யமாகவிருப்பது போல உத்ஸவாங்கமான வாத்யாதிகளும் அஜ்ஞர்கட்குப் போக்யமாகிப் பகவத் ப்ராவண்யத்தையு முண்டுபண்ணும். வாத்யாதி விசேஷங்களையே முக்ய ப்ரயோஜனமாகக் காணவந்த அஜ்ஞர்கள் அந்த வ்யாஜமாக அர்ச்சாவதார எம்பெருமானையும் கண்டு தொழுவார்களன்ருே! அதனுல் அவர்கட்குப் பகவத்விஷயத்தில் சிறிதேனும் அன்புண்டாகக்கூடும். பின்னர் அவ்வன்பு மிகுந்த பிரீதியையும் விளைவிக்குமாதலால் இவர்கட்கு வாத்ய முதலிய விசேஷங்கள்

---

* ஸாத்விகத்யாகமாவது.— எம்பெருமான் தனக்கு அடிமையான என்னைக்கொண்டு அவன் கொடுத்த இந்திரியங்களைச் சாதனமாக்கிப் பரிகரங்களோடு கூடிய தன்னுடைய பிரீதிக்காகப் புஷ்பங்களை ஸமர்ப்பிக்கும்படி ப்ரவர்த்திக்கிருன். இச்செய்கையையும் தானே ஆரம்பித்து முடிக்கிருன் என்ற நுஸந்திப்பதாம். இவ்வநுஸந்தானமானது தனக்கு ஒருவழியாலும் ஒரு விஷயத்திலும் ஸம்பந்தமின்மையைக் குறிப்பிடுவதாகும். இதனுல் அத்யந்த பாரதந்த்ர்யம் வெளியாகிறது.

விஷயப்ராவண்யத்தையே உண்டுபண்ணிவிடுமென்ற நிர்ப்பந்தமில்லை. ஜ்ஞாநிகட்கும் இந்த வாத்யாதி விசேஷங்கள் அநுபவ விரோதிகளாகமாட்டா; அவர்கள் லோகத்தோடே எம்பெருமானை அநுபவிப்பவர்களாதலால். அஃதாவது.— உலகிற் காணப்படுகிற பொருள்களெல்லாம் எம்பெருமானுக்குச் சரீரமாயிருப்பனவாதலால் இவையெல்லாம் அவன் ஸம்பந்தப்பொருள்களென்று அவற்றிலும் உபாதேய ப்ரதிபத்தி செய்வதாம். இதனால் வாத்யாதி விசேஷங்களும் இவர்களது பகவதநுபவத்தி லடங்கினவையாம்.

இனி, அர்ச்சாராதனம் நிஷ்பலம் (பிரயோஜனமில்லை) என்பாரின் கொள்கையை ஆராய்வோம். நிஷ்பலமென்பதை * திருஷ்டபல நிஷ்பலம் என்றும், † அதிருஷ்டபல நிஷ்பலமென்றும் இரண்டு வகையாகக் கொள்ளவேண்டும். இவற்றுள் அதிருஷ்டபலமில்லை என்று கொள்ளின் அர்ச்சாராதனத்தில் விதியில்லையாய் முடியும். ஏனென்றால் விதியுள்ளதெல்லாம் அதிருஷ்டபலமாயிருக்குமாதலால். விதியில்லை என்று கொள்வதிலும் ஸ்மிருதி முதலியவற்றில் விதிக்கவில்லையா? அல்லது வேதத்தில் விதிக்கவில்லையா? என்று இரண்டு வினாக்களெழும். அவற்றுள் எவற்றிலும் விதியில்லை என்ற முதல் பக்ஷம் சிறிதும் பொருந்தாது; ஸ்மிருதி இதிஹாஸ புராண பாஞ்சராத்ரங்களில் அர்ச்சாராதனத்தை விதித்திருக்கையாலே. ஸ்மிருதி முதலியவைகளில் § ராகப்ராப்தமானதை ¶ அநுவதித்துக்கூறியதேயன்றி வேறில்லை. அது விதியாகமாட்டாதென்று சொல்லப்படுமதே யெனின்; காமுகன் அன்பின்மிகுதியால் காமிநிவிஷயமான பணிவிடை செய்ய முற்படுகிறான். இப்பணிவிடை இவனுக்குப் பிரீதியினாலுண்டானதாகும். அதுபோல ஈசுவரவிஷயத்தில் அளவிடவொண்ணாத அன்புமேலிட்டு அவன் விஷயமான கைங்கர்யஞ் செய்ய முற்படுகிற அதிகாரிக்கு அர்ச்சாராதனம் ராகப்ராப்தமாகும்.

---

* திருஷ்டபல நிஷ்பலமாவது.—பிரத்யக்ஷப் பிரயோஜனமில்லையென்பதாம்.

† அதிருஷ்டபல நிஷ்பலமாவது—மறுமைப் பிரயோஜனமில்லையென்பதாம்.

§ ராகப்ராப்தம்—விருப்பத்தாலடையப்பட்டது.

¶ அநுவாதம்—முன்னே பெறப்பட்டதொன்றைப் பிறிதோர் பயன் கருதி மறுபடியும் கூறுவது.

இவ்வதிகாரிகை நோக்கி அங்கு அநுவதித்துக் கூறியதென்று சொல்லப்பட்டதேயன்றிப் பிறிதில்லை. பொதுமையாக நோக்குமிடத்தில் ஸ்மிருதி முதலியனவு அர்ச்சாராதனத்தை விதித்தனவென்றே கொள்ளவேண்டும்.

வேதவிதியில்லையாதலால் அர்ச்சாராதனஞ் செய்யவொண்ணாதென்கிற இரண்டாவது பக்ஷமும் பொருத்தமுடையதில்லை. வேதவிதியில்லாதவையெல்லாம் அநுஷ்டிக்கக்கூடாதென்று சொல்லும் பக்ஷத்தில் ஸ்மிருதியிற் சொல்லப்பட்ட *அஷ்டகாசிராத்தத்தையும், ஆசார ஸித்தமான † ஹோளாக விருதத்தையும் பெரியோர்கள் அநுஷ்டிக்காதொழிய வேண்டும். இவற்றை அநுஷ்டிக்கக் காண்கின்றோமாதலால் வேதவிதியில்லாததை அநுஷ்டிக்கக்கூடாதென்பது பொருந்ாதன்றோ! அஷ்டகாசிராத்தம் முதலியவை திருஷ்டபலமுடையனவென உரைக்கலாகாது. இவற்றிற்குத் திருஷ்டபலம் எங்கும் காண்கின்றோமில்லையாதலாலும், சிஷ்டர்கள் அநுஷ்டிக்கின்றார்களாதலாலும் அதிருஷ்டபலமுடையனவென்றே கொள்ளவேண்டும். இன்னும் வேதத்தில் விதிக்காமையை முன்னிட்டு சிலவற்றை அநுஷ்டிக்காமலிருக்க முடியாது. நடவாபி கிணறு குளம் வெட்டுதல், சோலையுண்டுபண்ணுதல் முதலியன வேதத்தில் விதிக்கப்பட்டுள்ளனவோ? இல்லையே. இங்ஙனமிருக்கவும் இவற்றையெல்லாம் அநுஷ்டிக்கக் காண்கின்றோமல்லவா. இதனால் ஸ்மிருதி முதலானவையால் விதிக்கப்பட்டனவும் கொள்ளத்தக்கனவாமென்பது பெறப்படுகிறது.

இனி, வேதத்தில் அர்ச்சாராதன விதியேயில்லையென்று சொல்லிவிடவும் முடியாது. மீமாம்ஸகர்கள் அஷ்டகாசிராத்தத்தை விதிக்கவந்த ஸ்மிருதியைக்கொண்டு அதற்கு மூலமான வேதவிதியுண்டென்று அநுமிக்கிறோமென்றார்கள். அதுபோல ஸ்மிருதியில்

---

* அஷ்டகாசிராத்தமாவது—மார்கழி தை பங்குனி மாதங்களில் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியில் செய்யும் சிராத்தமாம்.

† ஹோளாக விருதமாவது—பங்குனிமாதப் பௌர்ணமியன்று அநுஷ்டிப்பதொரு விருதமாம். இந்த விருதகாலத்தில் ஒருவருக்கொருவர் மஞ்சள் நீரைத் தெளித்துக்கொள்ளும் வழக்குண்டு.

அர்ச்சாராதனத்தை விதித்திருப்பதைக்கொண்டு அதற்கு மூலமான வேதவிதியுண்டென்று அநுமிக்கிறோம். ஆனால் ஸ்மிருதி கர்த்தாக்கள் ஆப்தர்களென்ற நிச்சயமில்லையாதலால் அவர்கள் வாக்யங்கொண்டு வேதவிதியுண்டென்றநுமிப்பது கூடாதென்னலாகாது. "மநு சொன்ன எந்த வார்த்தையும் மருந்துபோல் மிகவும் நலமான" தென்றும், "இவ்வர்த்தத்தைப் பராசர புத்திரர் வியாசர் சொன்னார்" என்றும், "இவ்வர்த்தத்தை யாக்யவல்க்யர் சொன்னார்" என்றும், "இவ்வர்த்தத்தை சாண்டில்யர் சொன்னார்" என்றும் உபநிஷத்துக்கள் கொண்டாடியிருப்பதால் இவர்கள் சிறந்த ஆப்தர்களாவார்கள்.

ஸ்மிருதி இதிஹாஸ புராணாதிகட்குப் பிராமாண்யம் ஒப்புக்கொண்டாலும் பாஞ்சராத்திரத்திற்கு எவ்வாறு பிராமாண்யங்கொள்வதெனின்; வேதம் ஸர்வேசுவரனால் வெளியிடப்பட்டதினால் எவ்வாறு பிரமாணமாயிற்றோ அதுபோலப் பாஞ்சராத்ரமும் எம்பெருமானால் வெளியிடப்பட்டதினால் பிரமாணமாகுமென்பதில் தடையில்லை. ஸர்வேசுவரனால் வெளியிடப்பட்ட காரணம்பற்றிப் பாஞ்சராத்ரத்திற்குப் பிராமாண்ய மொப்புக்கொள்ளின் பௌத்த சாஸ்திரமும் அவனாலே வெளியிடப்பட்டதினால் அதையும் பிராமாண்யமாகக்கொள்ளவேண்டும்படி நேருமன்றோ! அதனால் பாஞ்சராத்ரம் பிராமாண்யமாகாதெனின்; இந்த ஆக்ஷேபணை வேதத்திற்கும் வருமல்லவா? வேதத்திற்கு இந்த ஆக்ஷேபணை வராது. ஏனென்றால் பௌத்தாகமத்தை அசுரர்கள் மயங்கும் நிமித்தமாக வெளியிட்டானாதலால் அது பிரமாணமாகாது. வேதத்தை ஸாத்விகர்கள் உய்யுமாறு வெளியிட்டானாதலால் இது பிரமாணமாகத் தட்டில்லையென்க. பௌத்தாகமம் அசுரரை ஏமாற்றுவதற்காக வெளியிடப்பட்டதாமோ அதுபோல பாஞ்சராத்ரமும் ஏமாற்றுவதற்காக வெளியிடப்பட்டதாகுமென்று சொல்வதற்கிடமில்லை; வேதத்தையும் ஏமாற்றுவதற்காகவே வெளியிட்டானென்று சொல்லும்படி நேருமாதலால். வஞ்சிப்பதற்காக வேதத்தையும் வெளியிட்டான் என்று சொல்லிவிட்டால் எவர்க்கும் ஓரிடத்திலும் நம்பிக்கையுண்டாகமாட்டாது. ஆதலால் வேதத்தைப் பிரமாணமாக ஒப்புக்கொள்ளவேண்டுமென்றால் அந்த ஸமாதானம் பாஞ்சராத்திரத்திற்கும் பொருந்துமென்க.

ஸ்மிருதிகளை ஒப்புக்கொள்ளாதபோது பலவிபரீதங்களுக்கு இடமாகும். அவையாவன.— வேதத்தில் “வேதம்க்ருத்வா வேதிம் கரோதி” “வேதம் க்ருத்வா வேதிம்கரோதி” என்று சொல்லப்பட்டுளது. இதன் பொருளாவது.— வேதாத்யயனஞ்செய்து யஜ்ஞாநுஷ்டானம் செய்யவேண்டுமென்பதாம். இங்குரைத்தபடி நாம் கொண்டால் வேதாத்யயனமான பின்னர் யஜ்ஞாநுஷ்டாநம் தொடங்குவதற்கு முன்பு தம்மினும் அதற்காக ஆசமனஞ்செய்வது கூடாதென்று கொள்ளவேண்டும். வேதத்தில் “ஸ்நாத்வா புஞ்ஜீத” “ஸ்நாத்வா பும்ஜீத” என்றிருப்பதை நோக்கினால் ஸ்நாநம் செய்த பின்பு போஜனம் செய்யவேண்டுமென்றேற்படுகிறது. அப்படியாம்போது ஸந்தியாவந்தனம் ஸ்நாநஞ் செய்வதற்கு முந்தியாவது அல்லது போஜனத்தை முடித்துக்கொண்டபின்பாவது செய்யவேண்டுமென்றேற்படுகிறது. இதுநிற்க; ஒவ்வொரு கிரியையிலும் ஸ்மிருதியிற்சொன்ன முறைப்படி உபயோகப்படுத்துகிறோமாதலால் இதை ஒப்புக்கொள்ளாதபோது அம்முறைகளையெல்லாம் விட்டுவிடும்படி நேருமன்றோ! மேலும் யஜ்ஞோபவீத (பூணூல்) மந்த்ரமும் ஸ்மிருதியில்தானே சொல்லப்பட்டுளது. மந்திரங்களனைத்தும் ஸ்மிருதியிலே குறிப்பிடப்பட்டுள்ளன. ஸ்மிருதி பிரமாணமாகாவிட்டால் ஒரு கிரியையும் செய்யமுடியாதபடி ஒழியுமன்றோ! பல பேசியென்? ஸ்மிருதியைப் பிரமாணமாக ஒப்புக்கொள்ளாதபோது ப்ரக்ஷாளனத்துக்கு இத்தனை முறை மிருத்தை (மண்ணை) உபயோகிக்க வேண்டுமென்றும், ஆசமனஞ்செய்யவேண்டுவது இவ்வளவென்றும் நாமறிந்துகொள்ள முடியுமா? இதனால் ஸ்மிருதியைப் பிரமாணமாக ஒப்புக்கொள்ளவேண்டுமென்பது நிச்சயமாவதுபோல பாஞ்சராத்ரத்தையும் பிரமாணமாக ஒப்புக்கொள்ளவேண்டும்.

இன்னும் வியாசர் பிர்ம்ம மீமாம்ஸையில் உத்பத்யஸம்பவாதிகரணத்தில் பாஞ்சராத்ர ப்ராமாண்யத்தை வேதத்திற்கு ஸமமாக ஸ்தாபித்துள்ளார். மஹாபாரதம் சாந்திபருவம் மோக்ஷதர்மத்தில் இதன் பிராமாண்யம் விரிவாகச் சொல்லப்பட்டுளது. சிலர், நித்யமாய் ஒரு புருஷனால் செய்யப்படாததாய் தோஷமற்றதாயிருக்கிற வேதத்திலும் தம் கொள்கைக்கு மாறுபாடான அர்த்தங்களைக்குறிக்

கிற வாக்யங்கள் மத்தியிலே சேர்க்கப்பட்டனவென்று சொல்லுகிறார்கள். இவர்கள் உரையை முடிவுற ஆராய்ந்து பார்த்தால் தாய் முலைப்பாலினும் விஷங்கலந்திருப்பதாகக் கூறுவாரின் கூற்றை ஒக்குமன்றோ!

இதுநிற்க; வேதத்தில் அர்ச்சாராதனத்தை விதிக்கவில்லையென்பதாலும் ஒரு குறையில்லை. வேதத்தில் அர்ச்சாராதன விஷயமாக விதி ஏற்பட ஒரு காரணமுமில்லை. ஏனென்றால், வேதம் பூர்வபாகம், உத்தரபாகம் என்று இரண்டு வகையாக வகுக்கப்பட்டுளது. பூர்வபாகத்தில் இந்திரன் முதலானவர்களைச் சரீரமாகக்கொண்ட பரமாத்மாவின் ஆராதனம் குறிப்பிடப்பட்டுளதால் அர்ச்சாராதனத்தை விதிப்பதற்கு அங்கு இடமில்லை. உத்தரபாகமான உபநிஷத்துக்கள் சேதநாசேதந சரீரியாய் ஹார்த்தவிக்ரஹத்தோடுகூடிய பிர்ம்மவிஷயத்தில் ஆராதனரூபமான ஜ்ஞாநயோக, பக்தியோகங்களை உரைப்பதில் நோக்கமுடையன வாதலால் அவற்றிலும் அர்ச்சாராதனத்தை விதிக்க இடமில்லை.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் பிரின்ஸிபால் ப்ராஃ.மஸ்ரீ
V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B. A; B. L.) எழுதுவது.]

(276-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்வநுவாத விஷயத்தில் ஓர் சங்கதி சொல்லவேண்டும். ரமதாதுவிலிருந்து உண்டான சப்தத்தின் அர்த்தத்தை விளையாட்டாகக்கொண்டோம். ரதிப்ரிய என்கிற வார்த்தைக்கு விளையாடுபவன் எனக்கொண்டோம். இப்பதங்கட்கு வேறு அர்த்தங்கள் விளையாட்டென்கிற வர்த்தத்திலிருந்து பிறகு உண்டாயின் ரதிப்ரிய இவ்விரண்டு பதங்களும் கிருஷ்ணனின் விளையாட்டைக் குறிக்கிற

தென்று அநேக உதாஹரணம் காட்டமுடியும். ஹரிவம்ஸ: 67வது புத்தகத்தில் 68-வது அத்யாயத்தில் இவ்விதம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் விளையாட்டிலாசையுள்ள கோபாலர்களை ரதிப்பிரியர்களான கோபாலர்கள் எனக்கூறியிருக்கிறது. இவ்விடத்தில் இவ்வர்த்தமே பொருந்தும் ஏனெனில் ராஸமென்பது ஓர்வித விளையாட்டு. இற்றைக்கும் இப்பாரத வர்ஷத்தில் சிற்சிலவிடங்கள் இவ்விளையாட்டும், நிருத்யமும் வழக்கத்திலிருக்கின்றன. ராஸமென்கிற பதத்தின் அர்த்தத்தை ஸ்ரீதரஸ்வாமி இவ்விதம் வியாக்யானஞ் செய்திருக்கிறார்.

"அந்யோந்ய வ்யதிஷக்த ஹஸ்தாநாம் ஸ்த்ரீபும்ஸாம்
காயதாம் மண்டலீரூபேண ப்ரமதாம் ந்ருத்ய
விநோத: ராஸோநாம"

அதாவது ஸ்திரீ புருஷர்கள் ஒருவருக்கொருவர் கையைப் பிடித்துப் பாடிக்கொண்டு மண்டலரூபமாகச் சுற்றிக்கொண்டு எவ்விதம் நிருத்யஞ் செய்கிறார்களோ அவ்வித நிருத்யத்திற்கு ராஸமெனப் பெயர். குழந்தைகள் இவ்வித நிருத்யங்கள் செய்ய நாம் கண்டிருக்கிறோம். பிறதேசங்களில் குழந்தைப் பருவம் நீங்கியவர்களும் இவ்வித நிருத்யம் செய்வதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். இத்தகைய விளையாட்டில் ச்ருங்கார ரஸத்தின் நாமமுமில்லை, கந்தமுமில்லை. ராஸமென்பது ஓர்வித விளையாட்டு. அவ்விதமே ரதி என்பதும் ஓர்வித விளையாட்டு. ஆகையாலேயே ராஸவர்ணநத்தில் ரதியென்கிற சப்தம் உபயோகித்திருக்குங்கால் அதற்கு கிரீடையெனவர்த்தங்கொள்ளல் பொருந்தும்.

இந்த ராஸலீலை விருத்தாந்தத்தின் தத்வத்தை நன்றாயறிந்து கொள்வது அசாத்யம். இவ்விஷயத்தில் கூடார்த்தமொன்றுளது. அதை இப்பொழுது விஸ்தரிக்கப் புகவில்லை. மனுஷ்யனுக்கு மனுஷ்யத்வமே தர்மம். நம்முடைய விர்த்திகளை அநுசீலனம் செய்வது நமது முக்ய கடமையேயாம். மனுஷ்ய விர்த்திகள் சாரீரகாவென்றும், ஜ்ஞாநார்ஜநீ என்றும், கார்யகாரிணீயென்றும் சித்தரஞ்சனி என்றும் நான்குவிதமாகப் பிரிக்கப்பட்டுள்ளன. எந்த சித்தவிருத்தி

யின் மூலமாக சௌந்தர்யத்தை யநுபவித்து நிர்மலமான ஆனந்தத்தையடைகிறோமோ அந்த விருத்தி சித்தரஞ்ஜினியென்று சொல்லப்படுகிறது. அவ்விருத்தியை யநுசீலனம் செய்வதால் சச்சிதானந்தமயமான ஜகத்தையும் ஜகன் மயமான சச்சிதானந்தத்தையும் சம்பூர்ணமாக ஸ்வரூபாநுபவஞ் செய்யமுடியும். சித்தரஞ்ஜினி விருத்தியின் அநுசீலனம் செய்யாவிட்டால் தர்மத்திற்கு ஹாநி ஏற்படும். எவர் நமக்கு ஆதர்சமோ அவருடைய விருத்தி ஒவ்வொன்றையும் நாம் அநுசீலனம் செய்து ஆனந்தமடையவேண்டும். இந்த ராஸலீலையானது ஸ்ரீ கிருஷ்ணனுடையவும் கோபிஜனங்களுடையவும் சித்தரஞ்ஜினி விர்த்தியின் அநுசீலனத்துக்கு உதாரணம்.

கிருஷ்ணபக்ஷத்தில் உபபோகமாகும். ஆனால் கோபிகளின் பக்ஷத்தில் இது ஈசுவரோபாஸனை. ஓர் பக்கம் அனந்தனின் சௌந்தரிய விகாசம். மற்றோர் பக்கத்தில் அவ்வழகின் உபாசனை. சித்தரஞ்ஜினி விருத்தியின் கடைசி அநுசீலனத்தால் அவ்விருத்திகளை ஈசுவரமுகமாய்ச் செய்யவேண்டும். பிராசீன பாரதவருஷத்தில் ஸ்திரீகளுக்கு ஞானமார்க்கம் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அவர்கள் வேதாத்யயனம் செய்யக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்திரீகள் கர்மமார்க்கத்தை அநுஷ்டிப்பது இயலாத காரியம். ஆகையால் அவர்களுக்கு பக்தி மார்க்கத்தில் விசேஷ அதிகாரமுண்டு. பக்தியாவது "வாநுரக்திரீஸ்வரே" "பராநுரக்திரீசுவரே" ஈசுவரனிடத்தில் முழுமனதையும் செலுத்திப் பற்றுதல். அநுராகம் அநேக காரணங்களாலுண்டாகும். ஆனால் சௌந்தரியத்திலீடுபட்டு எந்த அநுராக மேற்படுகிறதோ அதே பலமாக அனுராகம். ஆகையால் அனந்தசுந்தரமூர்த்தியான பகவானின் அழகிலீடுபட்டு அம்மூர்த்தியை யாராதிப்பது ஸ்திரீகளுக்கு முக்கிய உபாயம். இத்தத்துவத்தை உருவகமாகக் கொண்டது ராஸக்கிரீடை. இப்பிரபஞ்சத்திலுள்ள வழகெல்லாம் அவரிடம் காணப்படுகிறது. சரத்கால பூர்ண சந்திரன், வெள்ளம் நிறைந்த யமுனை, மலர்ந்து நறுமணம் வீசுகிற புஷ்பங்கள் நிறைந்த லதாகிருகங்கள். மதுரசப்தத்துடன் பாடுகிற பக்ஷிகள் நிறைந்த பிருந்தாவனம். அதின் மத்தியில் அநந்தசுந்தரமான பகவானின் திருமேனியின்

விகாசம். இவைகளுக்கு உதவியாக பகவானின் இனிமை நிரம்பிய கானம். இவ்விதம் எல்லாப் பிரகாரமாகச் சித்தாஞ்சனத்தின் மூலமாகக் கோபிஜனங்களுக்குப் பக்தியதிகரித்தது. அவர்கள் அவ்விதமாகக் கிருஷ்ணன்பால் பிரேமையை வைத்துத் தங்களைக் கிருஷ்ணனென்றே நினைக்க வாரம்பித்தார்கள். ஜகதீசுவரனின் சௌந்தர்யத்தில் அநுராகமுடையவர்களாய் ஜீவாத்மா பரமாத்மா இவைகளின் அபேத ஞானத்தையுமடைந்து யோகிகளுக்கு யோகமூலமாகவோ ஞானிகளுக்கு ஞானமூலமாகவோ எது பரமோத்தேசியமோ அப்பலத்தைக் கோபிகள் பக்தி மூலமாகப்பெற்று பகவானிடத்தி லயமடைந்து நின்றார்கள்.

யுவர்களும் யுவதிகளும் ஓரிடத்திற்கூடி நிர்த்தகீதம் செய்வது நம்முடைய தற்காலத்து நடவடிக்கையின்படி நிந்திக்கத்தகுந்ததே. மற்றத் தேசங்களில் இவ்வழக்கம் நிந்திக்கத் தகுந்ததல்ல. விஷ்ணு புராணமியற்றிய காலத்தில் இவ்வழக்கம் ஸமாஜ சம்மதமாயிருந்திருக்கக்கூடும். பிற்படக்கிரந்தங்களியற்றிய காலத்தில் இவ்வழக்கம் அனுசரணையில் இல்லாமலிருக்கலாம்.

ஈசுவரன் சர்வவியாபியாயிருப்பவன். சர்வபூதங்களிடத்திலும், ஆகாயத்திலும், அக்கினியிலும், பூமியிலும், ஜலத்திலும், வாயுவிலும் எங்கும் நிறைந்தவன். ஆதலான் அவனுடன் கூடி விளையாடினால் யாதொரு தோஷமுமில்லையென்று சிலர் கருதுகிறார்கள். இவ்விதம் சமாதானம் செய்வதில் கொஞ்சமும் பிரயோஜனமில்லை. ஸ்ரீகிருஷ்ணபகவானவதரித்த காலத்தில் ஸ்திரீ புருஷர்கள் ஒன்று கூடி விளையாடுவது அக்காலத்து ஜனங்களால் தோஷமாகக் கொள்ளப்படவில்லை போலும்.

(தொடரும்.)